

பொன்னி



இதயத்தில் புயல் வீசுகிறது போலும்!

புயலில் எம். வி. ராஜம்மா



ஊடல் உதயமாகி விட்டதோ?

ஆத்மசாந்தியில் மாதவன் நாயரும் குமாரியும்

பொன்னி

பொருளடக்கம்

மலர் 6	மே 25, 1952	இதழ் 8

திருவள்ளுவர் ஆண்டு 1983
வைகாசித் திங்கள் 12-ம் நாள்

*

பொன்னி சந்தா விவரம்; உள்நாடு, இலங்கை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6—0—0, ஆறுமாதம் ரூ. 3—0—0. வெளிநாடு ஆண்டு ஒன்றுக்கு ரூ 6-12-0; ஆறுமாதம் ரூ. 3-6-0 [illegible] வி பி பி உண்டு

ஐந்து ரூபாய்

உடையைத் தலையில் கவிழ்த்தான் பையன். கண்ட நண்பர்கள் கற்பனை மிக்க தலைப்புகளை நம் முன்னே குவித்திருக்கிறார்கள். தலைப்புகளை உருவாக்கும் பணியில் நாளுக்குநாள் முன்னேற்றம் காட்டிவருகிறார்கள். கவிதைத் தொடரோ என என்னும் வண்ணம் பல தலைப்புகள் அமைந்துவிடுகின்றன.

இந்த இதழ் மேலட்டையில் கல்வாழை காட்சி தருகிறது. திரு. ராமகிருஷ்ணனின் நிழற்படம் இது கல்வாழை பூ விரிக்கும் காட்சி எத்தனை அழகு பொருந்தியது! உண்ணச் சிறு சிறு இலைகளை அளித்து, காண ஒய்யார மலர்களை அளிக்கும் கல்வாழை இயற்கை அழகுக்கு நல்ல எடுத்துக்காட்டு. நண்பர்கள் தங்கள் கற்பனைத் தலைப்புகளை வழங்கலாம். ஒருவர் ஒரு தலைப்புத்தான் அனுப்பலாம். நான்கு சொற்களுக்கு மேல் தலைப்பு நீளக் கூடாது. இந்த நிபந்தனைகளை அனைவரும் நினைவிற்கொள்ள வேண்டுகிறோம். 3–6–52க்குள் எங்களுக்குக் கிடைக்கும் தலைப்புகளில் சிறந்த தலைப்புக்கு ரூ. 5– பரிசு வழங்கப்படும். சென்ற இதழில் பரிசுபெற்ற தலைப்புகளின் விபரங்களை மற்றொரு பக்கத்தில் காணலாம்.

இம்மாத வெளியீடு!



அசோகா பிக்சர்ஸ்

என் தங்கை (தமிழ்)

டைரக்ஷன் : Ch. நாராயண மூர்த்தி & M. K. R. நம்பியார்

கதை :
T. S. நடராஜன்.

வசனம் :
T. S. நடராஜன் & K. M. கோவிந்தராஜன்

ஸ்டுடியோ : நியூடோன்

அசோகா பிக்சர்ஸ், 18, லஸ் அவென்யூ, சென்னை-4.

புது ஆட்சி

சென்னையில் காங்கிரஸ் ஆட்சி ஆச்சாரியார் தலைமையில் ஏற்பட்டு 'வெற்றி முழக்கங்களோடு' நடைபெற்று வருகிறது. புதிதாகக் கூடிய சட்டசபையில் காங்கிரஸ் கட்சிக்குப் 'பல வெற்றிகள்' கிடைத்திருக்கின்றன. காங்கிரஸ் சார்பில் நிறுத்தப்பட்ட சபா நாயகரும் உதவி சபாநாயகரும் பெருவாரியான வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். ஐக்கிய முன்னணி நியமித்த அபேட்சகர்கள் தோல்வியடைந்திருக்கிறார்கள். இவ்வாறு சட்ட சபைக் காங்கிரஸ் கட்சியின் பலம் அதிகரித்து வருகிறது. காங்கிரஸ் ஏடுகள் ஒருமுகமாக இவ்வெற்றிகளை மக்களுக்கு எடுத்துரைத்துப் பெருமை கொள்கின்றன.

பொதுத்தேர்தல் வந்தபோது யாரும் காங்கிரஸைத் தோற்கடிக்க முடியுமென்று எண்ணவில்லை. மீண்டும் காங்கிரஸ் ஆட்சி வருவது உறுதி என்ற எண்ணத்திலேயே எல்லாக் கட்சிகளும் செயற்பட்டன. ஆனால் தேர்தல் முடிவு யாரும் எதிர்பாராத வகையில் காங்கிரஸை மைனாரிட்டிக் கட்சியாக மாற்றிவைத்தது. இம்மாறுதல் சென்னை ராஜ்யத்தில் ஒரு புது ஆர்வத்தையும் விழிப்பையும் ஏற்படுத்தியது. காங்கிரஸல்லாத ஆட்சி ஏற்படுவது சாத்தியமாக இருந்தது. காங்கிரஸை எதிர்த்து நின்ற கட்சிகள் ஒன்று சேர்ந்து ஆட்சி நிறுவ ஆலோசனைகள் நடத்தின. அவை வெற்றி பெற்று ஐக்கிய ஜனநாயக முன்னணி உருவாயிற்று. காங்கிரஸை விட அதிக எண்ணிக்கையான உறுப்பினர்களை ஐக்கிய முன்னணி பெற்றிருந்தும் கவர்னர் விசித்திரக் காரணங்களைக் காட்டி, மைனாரிட்டிக் கட்சியான காங்கிரஸையே ஆட்சி நிறுவ அழைத்தார்.

அதன் பிறகு ஏற்பட்ட சூழ் நிலையில் காங்கிரஸுக்கு அதிக ஆதாவு பெருகியிருக்கிறது என்பது உண்மையே! ஆனால் ஐக்கிய ஜனநாயக முன்னணி பதவி ஏற்றிருந்தாலும் காங்கிரஸுக்கு ஏற்பட்டுள்ள இந்தப் பெருத்த ஆதாவு அதற்கும் ஏற்பட்டிருக்கும் என்பதை யாரும் மறுக்கமுடியாது. சட்டசபை உறுப்பினர்களில் குறிப்பிட்ட சிலர் பதவி ஏற்கும் கட்சியை ஆதரிக்கக் காத்திருந்தனர் என்பதும் அவர்களுக்குக் கொள்கை திட்டம் இல்லை என்பதும் அனைவருக்கும் தெரிந்த செய்தி. காங்கிரஸ் வெற்றி முரசு கொட்டுவது இவர்கள் தயவால் தான். நிலையான ஆட்சி ஏற்படாமல் சட்டசபை கலைக்கப்பட்டுவிட்டால் புதுத் தேர்தல் நடைபெற வேண்டியிருக்கும் என்றும், அத்தேர்தலில் மீண்டும் கலந்து பணத்தை வாரியிறைப்பது இயலாதென்றும் சுயேச்சையாளர்கள் சிலர் எண்ணுவதாலேயே அவர்கள் ஏற்பட்டுவிட்ட ஆட்சி எடுபடாமல் காப்பதில் கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர். இவர்கள் ஆதாவு ஆட்சிபீடம் ஏறும் யாருக்கும் கிடைக்கும் என்பதை நினைவில் கொண்டால் காங்கிரஸுக்கு ஏற்பட்டுள்ள புதுப் பலம் எது என்று விளக்கம் பெறமுடியும்.

ஐக்கிய முன்னணியை பதவி ஏற்காமல் செய்வதில் காங்கிரஸ் மேலிடமும் கவர்னரும் வெற்றி பெற்றுவிட்டார்கள். அவர்கள் அடைந்த வெற்றியைத் தூளாக்கியிருக்கலாம்—அதற்குச் சந்தர்ப்பமிருந்தது. ஆனால் நாம் மேலே குறிப்பிட்டபடி உறுதியற்ற சிலர் சட்டசபை அங்கத்தினர்களாக இருந்துகொண்டு தங்கள் நலத்தைப் பெரிதாக மதித்து மக்கள் நலத்தைப் பின்னணியில் தள்ளும் மனப்பான்மை கொண்டிருப்பதாலேயே அந்தச் சந்தர்ப்பம் உடனே கிட்டாமலிருக்கிறது. அமைச்சராகப் பதவியேற்றிருக்கும் கனம் மாணிக்கவேலர் நடத்தை உறுதியற்றவர்களின் துரோகப் போக்குக்கு நல்ல எடுத்துக்காட்டு. காங்கிரஸ் ஆட்சி நிறுவப்பட்டதிலும் ஒரு நன்மையுண்டு. தேர்தலின் போது காங்கிரஸை எதிர்ப்பதாகக் கூக்குரலிட்டுச் சட்டமன்றம் வந்தவர்களிலே எத்தனை பேர் 'போலிகள்' என்பதை மக்கள் புரிந்துகொண்டு விடலாமல்லவா? அவர்களின் எதிர்கால அரசியல் வாழ்வு மக்கள் அவர்களைப்பற்றி உருவாக்கும் எண்ணத்தில்தானே இருக்கிறது!

புது ஆட்சியைப்பற்றி பாராட்டுரைகள் கேட்டவண்ணம் இருக்கின்றன; பழைய காங்கிரஸ் மந்திரி சபைக்குக் கிடைக்காத பல ஆதாவுகள் ஆச்சாரியார் மந்திரி சபைக்குக் கிடைத்திருக்கின்றன. பத்திரிகைக்காரர்கள் தங்கள் சொந்த மந்திரிசபை போலப் பூரித்துப்போய் விளம்பரம் செய்து வருகிறார்கள். இது எதிர்பார்க்கப்பட்டதே. ஆச்சாரியார் மந்திரிசபை என்

பதற்காக ஆதாவு நல்கும் ராஜன் போன்ற ஜஸ்டிஸ் பிரமுகர்கள் வரிசையும் பெருகுகிறது. காங்கிரஸ் மந்திரிசபை அல்ல இப்போது நிறுவப்பட்டிருப்பது, மக்கள் ஆட்சிதான் ஏற்பட்டிருக்கிறது என்பது அவர்கள் வாதம். திறமையான நிர்வாகம் ஏற்பட்டுவிட்டது என்பதற்காகப் போற்றிப் புகழ்கிறார்கள் மற்றும் சிலர். இந்த ஆதாவு நிலைத்து நிற்கும் என்று காங்கிரஸ்காரர்கள் எண்ணிக்கொண்டிருப்பதாலேயே வெற்றிச் சங்கு பலமாக ஊதப்படுகிறது.

ஆச்சாரியார் மந்திரி சபை திறமையான நிர்வாகம் நடத்தும் என்று கூறுகிறவர்களின் வார்த்தைகளை அப்படியே ஒப்புக்கொள்வோம்; அது காங்கிரஸ் மந்திரிசபை அல்ல என்ற கூற்றையும் ஏற்றுக்கொள்வோம். ஆனால் சென்னை ராஜ்யத்தின் தற்போதைய தேவை என்ன என்பதை அறியாதவர்களே மேற்கூறியவாறு புகழ்மாலைகளை அள்ளி வீசுகிறார்கள். ராயலசீமையிலும் மற்றும் தமிழ் ஜில்லாக்கள் சிலவற்றிலும் பஞ்சம் கோரநர்த்தனம் புரிகிறது. இந்திய சர்க்கார் உணவுப் பிரச்னையை வெற்றிகரமாகச் சமாளித்துவிட்டதாகப் பெருமைப்பட்டுக் கொண்டாலும் சென்னையின் அரிசிப் பிரச்னை அப்படியேதான் இருக்கிறது. நெருக்கடிக்குள்ளானகைத்தறித் தொழிலைக் காப்பாற்ற எந்த விதமான திட்டமும் உருப்பெறவில்லை. இவ்வாறு மக்களைப் பீடித்துவரும் குறைகளை விவரித்துக் கொண்டே போகலாம். இக்குறைகளை நீக்கப் புது ஆட்சி என்ன செய்யப்போகிறதென்பதுதான் மக்கள் கவலை. சட்டசபையில் கேள்விகளுக்குக் கச்சிதமாகப் பதிலளித்துவிடுவதாலோ, குட்டிக்கதைகளை இணைத்துச் சொற்பொழிவுகளை நிகழ்த்திவிடுவதாலோ, கடவுளை நம்புங்கள் என்று கூறிவிடுவதாலோ இப்பிரச்னைகள் தீரப்போவதில்லை. "கம்யூனிஸ்டுகள் என் முதல் எதிரிகள்-நான் அவர்களுக்கு முதல் எதிரி" என்று சட்டசபையில் ஆச்சாரியார் போர்க்கோலம் பூண்டு குறிப்பிட்டார். "கம்யூனிஸ்டுகளை ஒழித்துக் கட்டுவதற்காகவே பதவி ஏற்றிருக்கிறேன்" என்றும் அவர் கூறுகிறார். அவர் யாருக்கு வேண்டுமானாலும் எதிரியாக இருக்கட்டும்! யாரை வேண்டுமானாலும் எதிரியாகக் கருதி ஒழித்துக் கட்டட்டும்! கவலையில்லை. மக்களைத் தம்முடைய எதிரியாக அவர் ஆக்கிக்கொள்ளாமல் இருக்கவேண்டுமே என்பது தான் நம் கவலை. புது ஆட்சி மக்கள் நன்மையில் எந்த அளவுக்கு நாட்டம்கொள்கிறது என்பதைப் பொறுத்தே அதற்குச் சட்டசபையில் இப்பொழுது கிடைக்கும் ஆதாவு நீடிக்க முடியும். மக்கள் வெறுப்புக்கு ஆளானாலும் சட்டமன்ற ஆதாவால் காலந்தள்ளலாம் என்ற போக்கு இனி ஒருபோதும் நடவாது.

ஆடும் மாடும்

டி.கே.சீனிவாசன்



பதினேழாவது அத்தியாயம்

எண்ணற்ற பல நூற்றாண்டுகளாகவே எரிதழலாக இருக்கும் கதிரவன் ஏதோ ஒரு வேதனையால்தான் வெந்துகொண்டிருக்க வேண்டும்! உலக முழுமைக்கும் ஒரே நேரத்தில் அவனால் ஒளி கொடுக்க முடிவதே இல்லை. ஒரு பாதியில் அவன் இருக்கும்போது மறுபாதியில் இருள் மண்டிவிடுகிறது. அவன் உள்ளத்தைச் சுட்டெரிக்கும் இந்தக் கனல்தான் உருவத்தையும் ஒரே நெருப்புக்கோளமாக ஆக்கிவைத்திருக்கிறதோ, என்னவோ! ஆனால்......இது அவன் குற்றமல்ல, உலக அமைப்பில் உள்ள கோளாறுதான் என்ற உண்மையைமட்டும் அவன் உணர நேர்ந்தால்...

வழக்கம்போலவே அன்றும் கிழக்கு வெளுப்பதற்கு முன்பே விழித்துவிட்டாள் சக்கு. படுக்கையைவிட்டு எழுந்திருக்க மட்டும் அவளுக்கு மனம் வரவில்லை. எழுந்து என்ன செய்வது? தொல்லையும் துயரமும் நிறைந்த இந்த உலகத்தில் விழித்திருப்பதைவிடத் தூங்கிக்கொண்டிருப்பதுதான் மேல் என்று நினைத்தாள். அந்தத் தூக்கமும் எப்போதுமே துண்டிக்கப்படாத தொடர்ந்த தூக்கமாக......

ஆணின் நிழல்தான் பெண் என்ற அர்த்தமற்ற முடிவைப் பெண்கள் பிறக்கும்போதே அவர்கள் உள்ளங்களில் விதைத்து வளரச் செய்து, அதனாலே எத்தனையோ எந்திழைகளை ஏக்கமும் கலக்கமுமாக வாழச் செய்யும் வன்னெஞ்சர்களைக் கொண்ட இந்த சமுதாயத்தில் பெண்ணாகப் பிறந்த குற்றம் அந்தப் பரிதாபத்துக்குரிய நங்கையின் வாழ்வைப் பட்டமரம் போலாக்கிச் சுட்டெரித்தும் விட்டது. உஷ்ணத்

தில் கரைந்துபோன பனிக் கட்டியைத் தேடியலைவது போன்ற உன்மத்தந்தான் இனி இன்பத்தை எதிர்பார்ப்பது என்பதும் அவளுக்குத் தெரிந்தே இருந்தது. ஆனால் மனித மனதைப் பற்றியுள்ள நோயான ஆசையின் அழியாத ரேகைகள், இடிவிழுந்து எரிந்துபோன மரம் எப்படியாவது துளிர்க்காதா என்று எதிர்பார்த்துக் காத்திருக்கச் செய்தன.

அவளுக்கு என்றிருந்த ஒரே ஆதாரவான குருட்டுத் தாயும் சேகரன் விட்டுப் பிரிந்த சிலநாட்களுக்குப் பிறகு செத்துவிட்டாள். வீட்டிலிருந்த அத்தனை பொருள்களும் விற்கப்பட்டும் அடகு வைக்கப்பட்டும் வெளியேறிவிட்டன. வீடு ஒன்றுதான் அவளுடைய ஒரே உடைமையாக எஞ்சியிருந்தது. அதில் ஒரு பகுதியை யாருக்காவது வாடகைக்குவிட்டு அதைக்கொண்டு வாழ்க்கை நடத்தலாம் என்று எண்ணியிருந்தாள் அவள். அதற்கும் ஆபத்து ஏற்பட்டது சில நாட்களில்.

சிதைந்துபோகும் குடும்பங்களின் உடைமைகளை மலிந்த விலையில் வாங்கியே மாளிகை வாசியாகும் மனித மிருகங்கள் எத்தனை திரிகின்றன நாட்டில்! அவற்றில் ஒன்றின் பார்வை பரிதாபத்துக்குரிய அந்த அபலைப் பெண்ணின் வாழ்வில்விழுந்தது. அந்தத் தெருவிலிருந்த ஒரு பணக்காரர்—அவர் ஒருவருக்குத்தான் அந்த வீதியிலேயே மூன்றடுக்கு வீடு இருந்தது—சக்கு இருந்த வீட்டை விலைக்குக் கேட்டார். இருக்கும் இடத்தையும் இழந்துவிட்டால் எங்கே அடைக்கலம் புகுவது என்ற நினைப்பால் மறுத்துவிட்டாள் சக்கு. கேட்டார்–கெஞ்சினார்–விலையைக் கொஞ்சம் கூட்டித் தருவதாகக்கூடச் சொல்லிப் பார்த்தார். எதற்கும் அவள் இணங்காமல் போகவே எப்படியாவது அவளை வீட்டிலிருந்து வெளியேற்றி விடுவது என்ற முடிவுக்கு வந்தார் அந்த மாடி வீட்டுக்காரர்.

காசுக்குக் கங்காணிகளாகும் கயவர்கள் நாட்டில் இல்லாமலா போய்விட்டார்கள்! அவர்களில் சிலரை அடகு பிடித்தார் அவர். "வேசி–விபசாரி அந்தவீதிக்கே களங்கம் விளைவிப்பவள்!" என்றெல்லாம் கதை கட்டிவிட்டார்கள். மாலை நேரமாகிவிட்டாலே போதும், அந்த வீட்டுக்கு முன்னால் ஒரு மந்தையே கூடிவிடும். சீட்டி அடிப்பவன்...... சிந்து பாடுபவன்......சிங்கார லீலைகளைப்பற்றி வர்ணிப்பவன்... சினிமாவுக்கு அழைப்பவன்...... சில்லறைகளின் சேஷ்டைகள் வளர்ந்துகொண்டே போயின. அந்தத் தெருவில் இருந்தவர்களுக்குச் சக்குவின்மேல் இரக்கம் ஏற்படாமல் இல்லை. ஆனால் எதிர்த்துக் கேட்கும் துணிவை விலைக்கு வாங்கும் சக்திதான் பணத்துக்கு இருக்கிறதே! நல்லவர்கள் சிலரும் அங்கே இருக்கத்தான் செய்தார்கள்; ஆனால்... அவர்கள் நல்லவர்களாக இருந்தால், நமக்கேன் இந்தத்



தொல்லை என்று குருடர்களும் செவிடர்களுமாக நடமாடினர்.

தன்னை ஏன் ஈசன் இப்படிச் சோதனை செய்கிறார் என்பதைப் பற்றியே சிந்தித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் சக்கு. வானம் வெளுத்தது. இருள் எப்போது கலையும் என்று காத்திருந்தவர்களைப்போல எல்லோரும் எழுந்து நடமாடத் தொடங்கினர். ஆனால் இவளுக்கென்று செய்ய எதுவுமே இல்லாததால் அமர்ந்தே இருந்தாள். பல் துலக்கலாம். பிறகு எங்கே போய்ப் பசியாறுவது?

"அந்த மோகனுவின் படம் பத்திரிகையிலே வந்திருக்கிறது, அக்கா" என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தான் வாசு.

"அத்தானும் அதிலிருக்கிறாரா, வாசு?" என்று ஆவலோடு கேட்டாள் சக்கு.

அடக்க முடியாது எழுந்த ஆத்திரத்தை உடனே அழுகையாக மாற்றினான் வாசு. எலும்பும் தோலுமாக எதிரே இருக்கும் சக்குவையே பார்த்தான். இழிவே உருவான சூழ்நிலையால் இன்னலுக்கும் தொல்லைக்கும் ஆளாகும் நிலை ஏற்பட்டுங் கூட அவளை அழிவுப் பாதையில் அனாதையாகவிட்டுச் சென்றவன் மேல் அவளுக்கிருந்த ஆசை...

"இன்னுமா உனக்கு அத்தான் மேல் உள்ள ஆசை போக வில்லை?" என்றான் ஏக்கத்தோடு.

"வேறு யார்மேல் என் ஆசை வைப்பது, வாசு?" என்றாள் சக்கு.

அவள் கேட்ட அந்தக் கேள்வி...! பல நூற்றுக் கணக்கான ஆண்டுகளாகப் பாரதியப் பண்பாடு என்ற போலிக் கட்டுப்பாட்டில் சிக்கிச் சிதறியும் எண்ணற்ற பாவையர்களின் இதயக் குமுறலான இந்தக் கேள்விக்கு விடை கண்டுபிடிப்பது என்பது...விளக்கம் கிடைக்காமல் போகும் நோங்களிலே எழுகின்ற விவரிக்க முடியாத பயத்தால் ஏற்படும் பக்தி மனப்பான்மையோடு அவளைப் பார்த்தான் வாசு. சீதையும் சாவித்திரியும் அவளுக்கு முன்னால் சிறு துரும்புகள்தாம் என்று தோன்றியது அவனுக்கு!

* * *

அன்று காலையில் பத்மா மலர்ந்திருந்தாள்; ஆனால் அவளுடைய கதிரவன் மட்டும் இன்னும் கண் விழிக்கவே இல்லை. உவமைக்குப் பொருந்தாத இந்த உண்மை...அன்பும் அனுதாபமுமாகத் தூங்கிக் கொண்டிருந்த சோமுவையே பார்த்தாள். அர்த்தமற்ற முரட்டுத்தனமும் பிடிவாதமும் கொண்ட அவனோடு அவள் நாலைந்து நாட்களாக நடத்தி வரும் போராட்டம்......! அந்த இரும்புத் தூண்டில் ஏறியிருக்கும் துருவைப் போக்கி அதற்குக் காந்த சக்தியை உண்டாக்குவது என்பது......

"அம்மா! பேப்பர்!"

வீட்டுக்குள் வந்து விழுந்தது பத்திரிகை; வீசியெறிந்த பையன் தன் வேலை முடிந்ததென்று பறந்தான் அங்கிருந்து. அழிவை நோக்கி ஓடும் உலகத்தின் அன்றைய முன்னேற்றம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளப் பத்திரிகையை எடுத்துப் புரட்டினாள் பத்மா. முதல் பக்கத்தில்......மோகனு! குளத்தில் நீர் மொள்ளக் குனிந்த பெண் மலர்ந்து கிடக்கும் தாமரைகளிலேயே மனதைப் பறிகொடுத்து நிற்பதைப் போல, செய்திகளுக்காகப் பத்திரிகையை எடுத்தவள் அந்தச் சித்திரத்திலேயே சிக்கிக் கொண்டாள். அந்தப் பெண்...! என்றோ ஒருநாள் கண்ணீர் விட்டுக்கொண்டே தோட்டத்தில் உட்கார்ந்திருந்தாள். அப்போதுதான் அவளைச் சந்தித்தாள் பத்மா. அவள் அழுகையைத் தணித்தாள். ஆலயத்துக்கு அழைத்துச் சென்றாள்—பிறகு சோமுவைப் பார்த்தபோது அவளைவிட்டுப் பிரிய நேர்ந்தது. பத்மாவின் நினைவில் தங்கி நிம்மதியைக் கெடுக்கும் ஒரு சில நிகழ்ச்சிகளில் ஒன்றாகவே அவள் இருந்துவந்தாள் அதுவரையில். ஆனால் இன்று...? அழுதவள் சிரிக்கிறாள்! அந்தச் சிரிப்பின் ஒலி கூடச் செவிகளில் விழுவது போலிருந்தது பத்மாவுக்கு. வாடி வதங்கியிருந்த

அந்தப் பயிர் எப்படி இந்த வளமையைப் பெற்றது? இயற்கை மழை பொழிந்ததா? அல்லது இரக்கப்பட்ட யாராவது நீரூற்றி.........மறுபடியும் அவளைச் சந்திக்கும் வாய்ப்பு எப்போதாவது அவளுக்கு ஏற்படுமானால்...சீ! என்ன இது? விண்ணுக்கு உயர்ந்தவர்கள் யாராவது மண்ணில் நடமாடுபவர்களை நினைவில் வைத்திருப்பார்களா? மறந்துவிடுவது தானே மனிதப் பண்பாக இருந்து வருகிறது!

“என்ன விசேஷம் பத்மா, இன்றைய பத்திரிகையில்?” என்று கேட்டான் சோமு.

“ஒரு நட்சத்திரம் தோன்றியிருக்கிறது, சோமு” என்று பதிலளித்தாள் பத்மா பத்திரிகையைப் பார்த்துக்கொண்டே.

“எங்கே பார்க்கலாம்”

படத்தை அவன் பக்கம் திருப்பினாள் பத்மா. உடனே ஆகாய வெடியைப்போல அந்தரத்துக்கு உயர்ந்தான் சோமு.

“வேசி! விபசாரி! வீதியிலே கிடந்தவள்!”

என்னதான் குளிப்பாட்டிப் புதுச்சட்டைப் போட்டனுப்பினாலும் குப்பையில் புரண்டு தன்னை அழுக்காக்கிக்கொண்டு வரும் சிறுவனைப் போலத் தோன்றினான் சோமு பத்மாவுக்கு.

“என்ன சோமு, உங்களுக்கு ஏற்பட்டுவிட்டது?” என்றாள் இரக்கத்தோடு.

“இவளால்தான் நான் இக்கெதிக்குள்ளானேன், பத்மா. நடுத்தெருவிலே நாசவாழ்வு நடத்திக்கொண்டிருந்தாள். நள்ளிரவில் ஒருநாள் அவளைச் சந்தித்தேன் நான். நல்வாழ்வு அமைத்துத் தருகிறேன் என்று சொல்லி அழைத்து வந்தேன் என்னோடு. இவளைக் காட்டிச் சினிமாக் கம்பெனி முதலாளி ஒருவனிடம் நிறையப் பணம் வாங்கிச் செலவழித்தேன். கடைசியில்...என் கழுத்தை அறுத்துவிட்டாள் இவள். என்னை ஏமாற்றிவிட்டாள். அந்தச் சினிமாக் கம்பெனி முதலாளி வாங்கிய பணத்தையெல்லாம் எண்ணிக் கீழே வை என்றான். ஒரே நேரத்தில் பெரு

தொகையை எப்படி என்னால் ஈடுசெய்ய முடியும், பத்மா? என்மேல் பிடிவாரண்ட் எடுத்தான் அவன். அதனால்தான்... பத்மா!...இன்று நான் உன் அடைக்கலப் பொருளாகி வீட்டுக்குள் அடைபட்டுக் கிடக்கிறேன்"

அராபியக் கதைகளைப் படிப்பதுபோலிருந்தது பத்மாவுக்கு இந்த அதிசய உண்மைகளைக் கேட்டபோது. மோகனு-சோமு! தனித்தனியே அவள் வாழ்வில் தலைநீட்டிய அவர்கள் இருவரும் எப்படியோ இணைந்து ஒரு பெரும் பிரச்சனையாகியிருந்தார்கள். அருவருக்கத்தக்க வாழ்வும் நடத்தையும் படைத்தவர்களாக அவர்கள் இருந்தும் அவளால் அவர்களை வெறுக்கவே முடியவில்லை. உடைந்து சிதறிய கண்ணாடி வளையலாகத் தோன்றவில்லை அவர்கள்; வெளிர்ந்துபோன தங்க வளையலைப் பார்ப்பதைப்போலவே அவர்களைப் பார்த்தாள். அதை எப்படியாவது சரிப்படுத்தி அணிந்து கொள்ளவேண்டும் என்ற ஆசைதான் ஏற்பட்டது அவளுக்கு.

"இப்போது என்ன செய்யப் போகிறீர்கள், சோமு?" என்றாள் மெதுவாக.

"பழிக்குப் பழி!"

"ஒரு பெண்ணிடமா......?"

அவனுடைய ஆண்மைக்கே விடப்பட்ட இந்த அறைகூவலை அவனால் அலட்சியம் செய்ய முடியவில்லை. அவளையே பார்த்தான். அந்தப் பார்வையில் பரிதாபமானதொரு தோல்வியை வெளிப்படுத்தும் மன உணர்ச்சிகள் மண்டிக் கிடந்தன. பத்மா எழுந்து அவனை நெருங்கினாள்.

"அறியாதவர்கள்; பித்தர்கள், குடிகாரர்கள், ஆற்றலற்றவர்கள் பேசும் பேச்சல்லவா இது, சோமு!" என்றாள்.

தன்னையும் ஒரு மாணவனாக்கி இப் பாடம் சொல்லிக் கொடுக்கும் அந்த ஆசிரியையை ஆச்சரியத்தோடு பார்த்தான் சோமு. அவனுடைய ஆத்திரத்துக்கு எப்படித் திடீரென்று இறக்கைகள் முளைத்தன என்பது தெரியவில்லை; இவனை ஏமாற்றிவிட்டு அது பறந்தோடிவிட்டது.

"பெண்களிலே பேய்களும் உண்டு, பத்மா!" என்றான் தன் வேகத்தைத் தணித்துக் கொண்டு.

அவனை வெறித்துப் பார்த்துக் கொண்டே சிறிது நேரம் நின்றாள் பத்மா, பிறகு தானிருந்த இடத்தில் போய் அமர்ந்தாள். இரவு பகலாக அவள் இதயத்தில் நிறைந்துகுவிந்த எண்ணற்ற முடிவுகள் அவள் நினைவுக்கு வந்தன. நெஞ்சில் ஈரமற்றுப் பெண்களைத் தங்கள் ஏவலாள்களாக நடத்தும் ஆண்வர்க்கத்தின் பிரதிநிதியாக நேரெதிரே இருக்கும் சோமுவை மதித்தாள். அழவில்லை; ஆத்திரப்படவில்லை; சாவதானமாகப் பேசத் தொடங்கினாள். கண்ணீருள் முக்கியெடுத்து வீசியெறிவது போலவே ஒவ்வொரு சொல்லும் வெளிப்பட்டன.

சோமு! ஒரு பெண்ணென்றால் அவளை என்னவோ என்று

வெறியும் விவேகமற்ற முரட்டுத் தனமும் கொண்ட ஆண்கள் வகுத்த சட்டதிட்டங்களாலும் கட்டுக்காவல்களாலும் இயக்கப் பட்டுவரும் அந்த அடிமையின் அழுகைக்குரலை நீங்கள் கேட் டதே இல்லை. தவழ்ந்து வளரும் போது தாய் தந்தையருக்கு, வாலிப வயதில் தன்னை வாழ்க் கைப் படுத்திக் கொண்டவனுக்கு தள்ளாத வயதில் தான் பெற்ற பிள்ளைகளுக்குக் கட்டுப்பட்டு அவர்கள் விதிக்கிற கடுமையான தண்டனைகளை ஏற்றுக்கொண்டு வாழவேண்டியிருக்கும் அந்த நிராதரவானவளின் நிலை உங் களுக்குத் தெரியாது. உலகந் தெரியாததால்...ஊத்த குரல் எழுப்ப இயலாமல் போனதால் ...தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளும் சக்தியைப் பெறாத தால், தனக்கேன் இந்த நிலை ஏற்பட்டது என்பதை அவள் எண்ணிப் பார்ப்பதே இல்லை. தான் படும் அவதியைத் தாங்கிக் கொள்ளுகிறாள். வாய்விட்டழும் வாய்ப்பே கிடைக்காததால் மன துக்குள்ளாகவே வைத்து மனம் புழுங்கிப்புழுங்கித் தேய்ந்து வரு கிறாள். இப்படிப்பட்ட ஒரு அற்ப ஜந்து கட்டுப்பாட்டை உடைத் தெறிந்துவிட்டுப் பேயாவதென் றால், அவளை அந்த நிலைக்குக் கொண்டுவந்த நெருக்கடி எப் படிப்பட்டதாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?"

சொல்லுக்குச் சொல் சோகத்தை வைத்திழைத்திருந் தாள் பத்மா. சோமுவைக்கூட அவள் வார்த்தைகள் அழச் செய்துவிட்டன.

"இப்போது நிலை மாறிவிட் டது, பத்மா" என்றான் மெது வாக.

"என்ன மாறிவிட்டது, சோமு? மஞ்சள் இருந்த இடத் தைப் பவுடர் கைப்பற்றிவிட் டது, அவ்வளவுதானே. அடிமை யாக வாழ்ந்தவள் அலங்காரப் பொம்மையாக உலாவுகிறாள்!"

"வளர்ச்சியே ஏற்படவில்லை என்கிறாயா, பத்மா?"

"ஆணும் பெண்ணும் வளரத் தான் செய்கிறார்கள், சோமு. காட்டு விலங்காகக் கண்டபடி திரிந்த ஆண் கொஞ்சங் கொஞ்ச மாகத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு மனிதனாக ஆகிறான்; சேற்றில் புழுவாக ஊர்ந்த பெண் காலப்போக்கில் தான் சிந்திய கண்ணீராலேயே தன்னை வளர்த்துக்கொண்டு பெண்மை நிலையை அடைகிறாள்! ஆனால் இந்த வளர்ச்சி ஏற்படும்போதே எத்தனையோ அணுக்கள் சிதைந்து சீரழிந்து போகின் றன"

"அப்படியானால் நீ மோகனாவை......"

"உண்மையிலேயே மோகனா உங்களிடம் உதவி பெற்றிருந் தால் அதை அவளால் மறக்கவே முடியாது—அவள் பெண்ணாக இருப்பதால்! ஒருவர் செய்த உதவிக்காகத் தங்களைத் தாங் களே உருக்குலைத்துக் கொண் டாவது கைம்மாறு செய்யும் பண்பு எப்படியோ பெண் களிடம் ஏற்பட்டிருக்கிறது!"

பத்மாவையே பார்த்தான் சோமு. தன்னைவிடப் பத்துப் பன்னிரண்டு மடங்கு உயரமான சிலையைத் தலையை நிமிர்த்திப் பார்க்கும் மனிதன் மனதில் தோன்றும் அடக்க உணர்ச்சி அவனுக்கு உண்டானது. அவன் எதிரே உண்மையான பெண்ணொருத்தி நின்றுகொண்டிருந்தாள். அவள் அவனை அதட்டுவதில்லை—ஆத்திரப்பட்டுக் கோபித்துக்கொள்ளுவதில்லை— அழுது உயிரை வாங்குவதில்லை! அவன் ஆத்திரமடைந்தால் அனுதாபப் படுகிறாள்—குமுறினால் கேலி செய்கிறாள்—கொந்தளிப்பு ஏற்படும் நேரங்களில் புயலைப் புன்னகையால் தணிக்கிறாள்! அவனைச் சிரிக்கச் செய்யாமல் அவளால் சிரிக்க முடிவதில்லை. அவளுக்கு அழவேண்டும் போலிருந்தால், அதனால் அவன் எப்படிக் கஷ்டப்படுவானோ என்ற கவலையால் அழாமல் தடுத்துக் கொள்ளுகிறாள். பள்ளியில் படிக்கும்போது தன்னால் ஆட்டிவைக்கப்படும் பதுமையாக இருந்த பத்மா எப்படித் தன்னையே நடத்திச் செல்லும் திறமை பெற்றாள் என்பது புரியாமல் போனது சோமுவுக்கு.

"நீ ஒரு பெண்ணாக இருப்பதால்தானே மோகனாவுக்குப் பரிந்து பேசுகிறாய்?" என்றான் கேலியாக.

"ஆமாம் சோமு. என்னைப் பற்றி எனக்கே முழுவதுந் தெரிந்திருப்பதால் எனக்காக வக்காலத்து வாங்கிப் பேசவேண்டும் என்றுதான் தோன்றுகிறது!" என்றாள் பத்மா.

மலைபோலக் கலங்காதிருந்த சோமு, அவள் அவன் வாழ்வில் குறுக்கிட்ட பிறகு கரைந்து ஆறுகி ஓடிக்கொண்டிருந்தான். அவனிடத்தில் ஏற்பட்டிருக்கும் இந்த அதிசயமான மாறுதலை எண்ணி ஆச்சரியப்பட்டான். "வாழ்க்கை வெறும் வரவு செலவுக் கணக்குதான்" என்ற அவனுடைய முடிவு தவறென்று பட்டது அவனுக்கு. இல்லாவிட்டால் வாழ்க்கை என்பது தான் என்ன? கலையா-கவிதையா-இலக்கியமா?

"பத்மா...!"

"என் சோமு?"

"வாழ்க்கை கலையா? கவிதையா? அல்லது வெறும் வரவு செலவுக் கணக்குத்தானா?"

"கலையுமல்ல—கவிதையுமல்ல. வாழ்க்கை ஒரு இயந்திரம்! அதை இயக்குபவர்களின் திறமையைப் பொறுத்திருக்கிறது அது கலையாவதும் கவிதையாவதும்!"

"ஏன் எல்லோராலும் அதிலிருந்து இன்பத்தைப் பெற முடியவில்லை? அத்தனை பேரும் திறமையற்றவர்கள் என்கிறாயா?"

"இயந்திரம் பழுதுபட்டிருக்கிறது, சோமு. இன்றைய சமுதாயத்தில் இருக்கும் ஏற்றத் தாழ்வால் ஓட்டை இயந்திரங்களைப் பெற்றிருக்கிறார்கள் பலர். இயந்திரத்தையும் திருத்தவேண்டும் — இயக்குபவனுக்கும் திறமையை உண்டாக்கவேண்டும்."

"இது ஆகுமா, பத்மா?"

"ஏன் ஆகாது? இதுதானே சோமு, சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படை!"

முழுமலர்ச்சியும் பெற்ற அந்தப் பெண்ணின் வளர்ச்சியைப் பார்த்து மலைத்துப் போனன் சோமு. அவள் பள்ளிக்கூடம் போன பிறகு கண்ணுடியில் ஒரு முறை பார்த்துக்கொண்டான். அகத்தில் ஏற்பட்ட தெளிவால் முகமும் களங்கமற்றுக் காணப்பட்டது.

"சோமு! நீ இன்றிலிருந்து மனிதனுகி விட்டாய்! இனிக் தவறியும் மிருகமாகாதே" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

இடைவேளை உணவுக்குப் பிறகு ஆசிரியைகள் அறையில் உட்கார்ந்திருந்தாள் பத்மா. எதிரேயிருந்த மேஜைமேல் படிக்கப்பட்டும் பிரிக்கப்படா மலும் பலதரப்பட்ட பத்திரிகைகள் கிடந்தன. வெளியே மர நிழலில் சில சிறுமிகள் விளையாடிக் கொண்டிருந்தனர். குடையைப் பிடித்துக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாகச் சில ஆசிரியைகள் போய்க் கொண்டும் வந்துகொண்டும் இருந்தனர். கையில் விரித்துப்

பரிசு விவரம்

10–5–52 இதழ் தலைப்புப் போட்டியில் ரூ. 5 பரிசு பெற்ற தலைப்பு:

கூடை மணிமுடி சூடிய மழலை!

பரிசு பெற்றவர்:

பா. முருகையன், சிதம்பரம்

பாராட்டுக்குரியவை :

பழமில்லாக் கூடை–பல் இல்லா வாய் !
திரு. கேசவன், ஆரணி

முகிலைக் கவிழ்த்திருக்கும் மகிழ்ச்சி நிலவு !
வி. சு. அரங்கண்ணல், புதுப்பட்டி

விளையாட்டில் கவிழ்த்தால் இன்பம்;
வாழ்க்கையில் கவிழ்த்தால் துன்பம் !
பிரேம இருதயநாத், சென்னை-4

வருநாளில் நாடு காக்கும் சுமை என் தலைமேல்!
மா. ப. குணுளன், சென்னை-6

கூடையைக் கவிழ்த்துக் குறும்பை அவிழ்த்தான்!
எல். டேவிட், சென்னை-14

பிடித்திருந்த பத்திரிகையில் பத்மாவின் கவனம் செல்லவில்லை. இந்த நேரத்தில் சோமு என்ன செய்து கொண்டிருப்பார்?

"குளிர்ந்த நேரங்களில்தான் கோமளமான நினைவுகள் உண்டாகும்; இந்த வெய்யில் நேரத்தில் கூடவா......?" என்ற குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தாள்; அவளுடைய ஆசிரியைத் தோழிகள் இருவர் நின்றனர்.

"வேதனையடி அம்மா! வேதனை!...வேதனை!" என்றாள் ஒருத்தி.

அந்த உரையாடலில் ஆத்திரம் துளிக்கூட உண்டாகவில்லை பத்மாவுக்கு; உண்டானதுபோலக் காட்டிக்கொண்டாள்.

"நான் மனைவியாக மாட்டேன் அம்மா; துணைவியாகத்தான் ஆவேன்" என்றாள் ஒருத்தி.

"அதென்னடி மனைவிக்கும் துணைவிக்கும் உள்ள வேற்றுமை?" என்று கேட்டாள் மற்றொருத்தி.

"மனைவியாவதென்றால் அடுப்பங்கரையும் வீடும் மட்டும் தெரிந்தால் போதும். துணைவியாவதற்கு அகில உலகமும் தெரிந்திருக்கவேண்டும். அப்போதுதானே தன் தோழனுக்கு எல்லாத் துறைகளிலும் ஆலோசனை கூறமுடியும்."

பள்ளிக்கூடத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் பத்மா பேசிய பேச்சின் கருத்துக்கள் தாம் அவை.

"போங்கடி! ஓய்ந்துபோய் வந்து உட்கார்ந்தால் உங்கள் தொல்லை வேறு உயிரை வாங்குறது" என்றாள் உடனே.

அப்போதும் கோபம் துளிக்கூட உண்டாகவில்லை அவளுக்கு!

* * *

மாலை மணி ஐந்துக்கு மேலிருக்கும். ஜன்னல் வழியாகத் தெருவையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் சக்கு. யாரோ கொண்டுபோன மாலையின் இதழ்கள் மண்ணில் சிதறிக் கிடந்தன. அந்த மென்மையான இதழ்கள் தங்கள் கால்களில் பட்டுக் கசங்கிக் கொண்டிருப்பதை உணராமலே அவற்றை மிதித்துக்கொண்டு நடந்தனர் போகிறவர் வருகிறவர்கள் எல்லாம். அந்த இதழ்களுக்கும் இவள் வாழ்வுக்கும் உள்ள ஒற்றுமை......

அஸ்தமன நேரத்தில் தொடங்கும் அந்தகாரம்......! அதைப்பற்றியே நினைத்தாள். எவருக்கும் தெரியாமல் வீட்டை விட்டு வெளியேறித் தன் வாழ்வை முடித்துக்கொண்டால்......எழுந்து உள்ளே போனாள் சக்கு. சுவரில் மாட்டப்பட்டிருந்த இரண்டு படங்களுக்கு எதிரே நின்றாள். முதல்படம் சேகருடையது. இரண்டாவது படம் மகாவிஷ்ணு

வின் மனைவி இலட்சுமியுடை யது. அவளைக் காத்து ரட்சிக்க வேண்டிய அவர்கள் இருவரும் தங்கள் கடமையிலிருந்து நழுவி விட்டனர். அதனால் அவளுக்கு ஏற்படும் அவதியைப் பற்றிய நினைவே தோன்றவில்லை அவர்கள் இருவருக்கும். ஆனால்... அவளுக்கு என்னவோ அவர்கள் மேல் நம்பிக்கை இருக்கத்தான் செய்தது.

"அம்மா சக்கு!" என்ற குரல் கேட்டுத் திரும்பினாள் சக்கு.

எதிரே அந்தக் கிழவர் நின்று கொண்டிருந்தார். அந்த வீதியிலேயே வயதானவர். அவள் குடும்பத்துக்கும் உற்ற துணையாக இருந்தவர். அவர் வாழ்ந்த காலம் ஒன்றிருந்தது. இன்று வல்லவர்கள் நடத்தும் வஞ்சக விளையாட்டால் வாழ்விழந்து விடும் எத்தனையோ பேர்களில் ஒருவராகிவிட்டார். பணம் அவரிடமிருந்தபோது அவர் பேசினார்—எல்லோரும் தட்டாமல் கேட்டார்கள். அது அவரை விட்டு விலகியவுடன் எல்லோரும் அவரிடம் பேசினார்கள்—இவர் தட்டாமல் கேட்கும்படியாகி விட்டது.

"என் தாத்தா?" என்றாள் சக்கு.

கிட்ட நெருங்கி வந்தார். அம்மன் படத்திலிருந்த குங்குமத்தை யெடுத்து அவள் நெற்றியிலே பதித்தார்.

"நீ சௌபாக்கியவதியாக இருக்கவேண்டும், அம்மா. இந்தச் சண்டாளர்கள் நாசமாகப் போகட்டும்..."

ஆறுதல் மொழியை முதன் முதலாகக் கேட்டவுடன் சக்குவுக்கு இருந்த ஆத்திரம் எல்லாம் வெளிப்பட்டது. அதை அப்படியே அழுகையாகமாற்றினாள்.

"தாத்தா...!"

"அழாதே அம்மா. நீதான் பைத்தியக்காரப் பெண். காலம் மாறும்போது நாமும் மாறிவிட வேண்டாமா? ஆதிகாலத்தில் தான் ராமன் சீதையைக் காட்டுக்கு அனுப்பினால் ராமாயணம் நடக்கும். இந்தக் காலத்தில் எந்த ராமனாவது தன் சீதையைக் காட்டுக்கு அனுப்பினால் ராமாயணம் நடக்காது; ஜீவனாம்ச வழக்குத்தான் நடக்கும்"

"என்ன தாத்தா சொல்லுகிறீர்கள்?"

"தனியாகவே எத்தனை நாட்களுக்கு அம்மா அவதிப்படப் போகிறாய்? ஏதோ தலைவிதி சேகான போய்விட்டான். அவனை எப்படியாவது தேடிப் போய்ச் சேர்ந்துவிடு"

அவர் போன பிறகு நெடுநேரம் அவர் சொன்னதைப் பற்றியே சிந்தித்தாள். இருள் பரவத் தொடங்கியது. நெருப்புப் பெட்டியை எடுத்து ஆட்டிப் பார்த்தாள். ஒரே குச்சிதான் இருந்தது. எடுத்து அதை எரிய வைத்தாள். ஒளி கொடுப்பதற்காகத் தன்னைத்தானே உருவழித்துக்கொள்ளும் அந்தக் குச்சியின் மேல் இரக்கம் இரக்கமாக வந்தது அவளுக்கு.

(தொடரும்)

மதுவும் மங்கையும்

கலைமணி

ஜனாப் கலீல்உல்லா ஒரு கையில் ஹுக்காவை ஏந்தி வாயில் வைத்துச் சுவைத்த வண்ணமும், மறுகையில் கைத்தடியைப் பிடித்துக் கீழே அடிக்கடி ஊன்றியவாறும் பேகம் ஜமீமா மாளிகையினுள் நுழைந்தார். கூடவே ஹுக்காவுக்காகப் புகையிலை நிரப்பும் கும்மட்டியை ஒருவன் ஏந்தி வந்தான். கிழவன் ஜனாப்பின் வெண்தாடி பலகணி வழியே வீசும் காற்றினால் அலை மோதியது. பேகம் வெல்வெட் துணியில் ஜரிகைப்பூவேலை செய்துகொண்டிருந்தாள். உல்லா ஒருமுறை கனைத்துக் கொண்டு, "பேகம்" என்றார்.

"உம்..."

"வேலையின் மும்முரத்தில் இருக்கும்போது வந்தவர்களை வா என்று கூடச் சொல்ல மாட்டாய், நீ... ஹூம்..."

பேகம் நிமிர்ந்து "நான் வாருங்கள் என்று சொல்லித் தானா நீங்கள் வரவேண்டும்?" என்றாள்.

"என்ன இருந்தாலும்..." என்று இழுத்தார் உல்லா.

"மரியாதை என்று ஒன்று இருக்கிறதே என்கிறீர்களா? உண்மைதான். ஆனால்..."

"என்ன ஆனால்...?"

"உங்களுக்கும் எனக்கும் வாலிபம் போய்விட்டதே!..." பேகத்தின் இதழ்களில் புன்னகை களிநடம் புரிந்தது.

கிழவன் 'இடி இடி' யென்று சிரித்து "யார் சொன்னது? இதோ பார் என் புஜபலபராக்கிரமத்தை! நான் ஒரு நாளும் கிழவனல்ல" என்று தன் முண்டாவைத் திரட்டி உருட்டி ஏற்றிக் காண்பித்தான்.

"போகட்டும்; நீங்கள் புத்தம் புது மாப்பிள்ளைதான். ஆனால் நான் தாயாகி, பாட்டிகூட ஆகி விட்டேன்." என்றாள் பேகம் சிரித்தவாறு.

"நீ பாட்டியும் ஆகியிருக்கலாம், பாட்டிக்குப் பாட்டியாகக் கூட ஆகியிருக்கலாம்.... ஆனால் நான்..."

"ஆமாம், நீங்கள் வாலிபர் தான் ...... ஹீராவுக்காகவாவது நீங்கள் வாலிபராக இருந்து தானே தீரவேண்டும்..."

இந்த வார்த்தை கிழ ஜனுப்பின் உள்ளத்தை ஒரு குலுக்குக் குலுக்கியது. ஏதோ ஒரு முக்கிய காரியத்தை மறந்துவிட்டு வந்தவர்போல் அந்த இடத்தை விட்டு ஓடினர். பேகத்துக்கு அவர் திடீரென்று அங்கிருந்து அகன்றதற்குக் காரணம் புரியவில்லை. ஏதோ முக்கிய காரியம் போலிருக்கிறது. அது தான் அப்படி ஓடுகிருர் என்று அவளும் கிளைத்துக்கொண்டாள்.

ஓட்டமும் நடையுமாய் ஓடிவந்த ஜனுப் அந்தப்புரத்தின் சமையற்கட்டுக்குள் நுழைந்தார். ஹீரா அன்றைய உணவுக்கு வேண்டியதைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தாள்.

அங்கு வந்து நின்ற உல்லா ஒருமுறை தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்திக் கொண்டு "ஹீரா" என்ருர்.

ஹீரா என்ற அந்த அழகிய அடிமைப்பெண்ணும் திரும்பி "என்ன மகாராஜ்" என்ருள்.

"இங்கு கொஞ்சம் வருகிருயா, உன்னிடத்தில் ஒரு முக்கிய செய்தி சொல்ல வேண்டும்"

"வேலை நிறைய இருக்கிறதே, மகாராஜ்..."

"இதோ, ஒரு கணத்தில் திரும்பிப் போய் விடலாம்; சற்று வாயேன்..."

ஹீரா மறுக்க முடியாது ஜனுப்பைப் பின்தொடர்ந்தாள். இருவரும் ஒரு திருப்பத்துக்கு வந்தனர்.

ஜனுப் மெதுவாக "ஹீரா, நேற்று இரவு நீ என் வரவில்லை...?" என்ருர்.

"பேகம் நெடுநேரம்வரை பேசிக்கொண்டிருந்தார்கள். வர முடியாது போய்விட்டது, ஜனுப்..."

"போ ஹீரா, நீ ஒவ்வொரு நாளும் இப்படித்தான் சொல்கிருய்..."

"என்ன செய்வது மகாராஜ்? நான் எங்கேயாவது சற்று வெளியே சென்ருலும் மகாராஜாவிடம் செல்கிருயா என்று கேட்கிருர்கள்..."

"சரி. ஒரு முக்கிய விஷயம். டில்லியிலிருந்து இன்று பேகத்தின் தங்கை மகன் இளவரசன் வருகிருன்..."

"வரட்டுமே...! எனக்கென்ன...?"

"அவன் ஒருமாதிரி..."

"என், உங்களைப்போல அவரும் ஒரு மாதிரியோ..."

நளினச் சிரிப்பு அந்தச் சிங்காரியின் உதடுகளில் நெளிந்தது.

ஜனுப்பும் தனக்குத்தானே ஒருதரம் சிரித்துக்கொண்டு, "இல்லை இல்லை...பெண்களிடம் பழகத் தெரியாத முரட்டுப் பையன் அவன். அதற்காகத் தான் சொன்னேன்" என்ருர்.

"எந்த முரடர்களும் எங்களைப்போன்ற சிங்காரிகளிடம் வாய் மூடி மௌனியாகத்தானே ஆகவேண்டும்..."

"தவறு, தவறு. ஔரங்கசீப்பைப்பற்றி உனக்குத் தெரியாது. அவன் இளமையிலிருந்தே முரடன். தந்தை

தமையன் கலையெல்லாம் கொன்று பட்டமேறியவன். அவன் விஷயத்தில் நீ ஜாக்கிரதையாகத்தான் இருக்க வேண்டும்..."

"நான் ஏன் அதற்காகப் பயப்படவேண்டும்?...வந்தால் அவர் பாட்டுக்கு வரட்டும்; போகட்டும்..."

"நீ அப்படி அலட்சியமாக இருக்கக்கூடாது. அந்தப் பயலின் கண்கள் கழுகுக் கண்கள்...நீ அவன்முன் தென்படவே கூடாது..."

"தென்பட்டால்...?"

"ஹீரா... விளையாடாதே!... நான் உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன்...நீ அவன் முன்வரவே வராதே!..."

அர்த்தமுள்ள சிரிப்பொன்றை ஹீரா சிந்திவிட்டு "ஆகட்டும்" என்றாள்.

அப்பொழுதுகூட ஐனுப் நம்பாது, "ஹீரா, இது வேடிக்கையல்ல, விளையாட்டுமல்ல. நான் உன்னை எவ்வளவு நம்பியிருக்கிறேன் தெரியுமா? அதற்கேற்றபடி நீ நடந்துகொள்ளவேண்டும்..." என்றார்.

"ஐயோ போதுமே. நான் வரவில்லை, வரவில்லை, உங்கள் இளவரசர் முன் வரவில்லை! போதுமா...?போங்கள்..."என்று கூறிவிட்டு ஹீரா வேகமாக அவ்விடத்தைவிட்டு அகன்றாள்.

தன் மாளிகைக்குச் சென்ற பின்னரும் ஐனுப்பின் உள்ளத்தில் அமைதி நிலவவில்லை.

'அந்தப் பயல் கண்ணில் இந்த அலங்காரி தென்படுவாளானால் பயல் மனம் மாறிப்போனாலும் போவான். இவ்வளவு வயதாகிய நாமே இவளின் மயக்க விழியில் சொக்கிப் போனோம் என்றால் இளைஞனாகிய அவன் நிச்சயம் இவளை அபகரிக்கவே பார்ப்பான். எதற்கும் நாமும் கொஞ்சம் கவனமாகத்தான் இருக்கவேண்டும்... பொல்லாத பயல் நம்மைப் பொசுக்கிவிட்டுக் கூட இந்தப் பொற்கொடியைத் தூக்கிக்கொண்டு போய்விடுவான்...ஊம்...ஒருகால் இவளே.. ஆமாம்... யார் சொல்ல முடியும்? இவளும் பொல்லாத பெண்தான்!' இப்படி முன்னும் பின்னுமாக ஐனுப்பின் எண்ணங்கள் அலைமோதிக்கொண்டிருந்தன. இதற்கிடையே சென்ற நினைவுகளும் மெல்லத் தலை தூக்கி நின்றன.

* * *

அடிமைப் பெண்கள் எத்தனையோ பேர்கள்தாம் அரண்மனையில் வேலை செய்திருக்கின்றனர். ஆனால் அவர்களில் யாருமே உல்லாவின் நெஞ்சத்தின் விளிம்பைக்கூடத் தொட்டதில்லை. ஆனால் ஹீரா! ...ஹீரா அந்த அடிமைகள் கூட்டத்தில் ஒப்புயர்வற்ற ஒளி விளக்காக, தனித்து நின்று கண்களைப் பறிக்கும் மாணிக்கமாக விளங்கினாள். அவலட்சணமாக அமையப் பெற்று வாழ்ந்த அடிமைகள் கூட்டத்தில் ஹீரா ஒருத்திதான் பெண்மையின் முழு உருவமும் பெற்றுக் காண்போர் கண் கவரும்

கட்டழகியாக விளங்கினாள். அவளின் குறுகுறுத்த கண்களின் நிட்சண்யம் உள்ளத்தையே ஊடுருவிச் செல்லும் சக்தி வாய்ந்ததாக இருந்தது.

ஹீராவை முதன்முறையாகப் பேகத்தின் அந்தப்புரத்தில் கண்ட ஜனாப் தன் கண்களையே நம்பவில்லை. அடிமைப் பெண்களிலும் இப்பேர்ப்பட்ட அழகியிருக்கிறாளா என்று ஆச்சரியக் கடலில் ஆழ்ந்துபோனார்.

அன்றையிலிருந்து இன்றுவரை 'ஹீரா, ஹீரா' என்ற நாமாவளிதான். இந்த ஹீரா பஜனை அரண்மனையிலுள்ள எல்லோருக்குமே தெரிந்துவிட்டது. மூலைமுடுக்கில், சந்துபொந்தில் ஒருவருக்கொருவர் இதைப்பற்றிப் பேசவும், முணுமுணுக்கவும் ஆரம்பித்தனர். ஹீராவோ இதைப்பற்றியெல்லாம் சிறிதுகூட அஞ்சாமல் முன்னிலும் பத்துமடங்கு தலைநிமிர்ந்து நடக்கவும், உடை உடுத்திக்கொள்ளவும், அலங்காரம் செய்துகொள்ளவும் ஆரம்பித்தாள். ஒரு ராணியைப்போல் உலவி வரத்தொடங்கினாள். கிழ ஜனாப் அவள் இழுத்த இழுப்பிற்கெல்லாம் ஆடினார். அவள் காலாலிட்ட வேலையைத் தலையால் செய்யத் தலைப்பட்டார். அவளை ஒருநாள் காணமுடியாவிட்டால் உன்மத்த நிலை எய்துவார்.

* * *

திடீரென்று அரண்மனையின் முன் ஒரே பரபரப்பு ஏற்பட்டது. ஔரங்கசீப் குதிரையை விட்டிறங்கி நேரே பெரியம்மாவைப் பார்க்கப் போனான். பேகமும் எதிர்கொண்டழைத்து உச்சிமோந்து வாழ்த்தி வரவேற்றாள். கிழவரைக் காணாத இளவரசன் "எங்கே பெரியம்மா, ஜனாப்" என்று வினவினான்.

"அவருக்கென்ன, ஹூக்காவும் கையுமாக எங்கேயாவது மாய உலகில் திரிந்துகொண்டிருப்பார்" என்றாள்.

இளவரசன் தனக்குத்தானே சிரித்துக்கொண்டே தோட்டத்துப்பக்கம் போனான். இவர்கள் இருவரின் உரையாடலையும் ஹீரா திரைமறைவில் இருந்து கவனித்துக்கொண்டிருந்தாள். இளவரசனின் அந்த அசா



தாரணமான புத்தி தீட்சண்யமும் பிடிவாதத்தன்மையும் அவளது உள்ளத்தில் ஒரு புயலை எழுப்பின. ஏதோ சொல்ல முடியாத உணர்ச்சி அவள் உள்ளத்தில் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தியது. மெதுவாக அங்கிருந்து நழுவினாள்.

* * *

மின்னல்போல் தன்முன் தோன்றி மறைந்துபோன அந்த அழகியைப்பற்றியே சிந்தித்தான் ஔரங்கசிப். அந்தப்புரத் தோட்டத்தில் வெளியார் வர முடியாதே; அப்படியானால்...! திடீரென்று அவனுக்கு என்ன தோன்றியதோ தோட்டத்தில் உலவுவதை விடுத்து 'திடுதிப்' பென்று தன் பெரியம்மாவின் முன் வந்துநின்றான். அவனது அவசரத்தையும் முகத்தோற்றத்தையும் கண்ட பேகம் பயந்துவிட்டாள். 'என்ன நடந்ததோ, இப்படி வந்து நிற்கிறானே... இதன் விளைவு— என்னவோ?' என்று நடுங்கினாள்.

"பெரியம்மா" என்றான் இளவரசன்.

"என்னப்பா...?"

"நமது அரண்மனையில் தங்களைந் தவிர வேறு யாராவது பெண்கள்..."

"எத்தனையோ அடிமைப் பெண்கள் இருக்கிறார்கள்..."

"அதைக் கேட்கவில்லை. யாராவது... ராஜகுமாரி... அழகிய பூங்கொடி..."

"அப்படி யாருமில்லையே..."

"பின் யார் அந்தப் பூந்தோட்டத்தில்..."

"எனக்குத் தெரியாதே..."

"முதலில் இங்கிருக்கும் பெண்களையெல்லாம் கூப்பிடுங்கள்..."

ஔரங்கசீப்ன் ஆணையை



அவனால் மறுக்க முடியுமா? கட்டளை பறந்தது. அடிமைப் பெண்களெல்லாம் வரிசையாக வந்து நின்றனர். இளவரசனின் முகம் சுண்டிச் சுருங்கிக் கருகி வந்தது. 'எங்கே அவள், எங்கே அவள்' என்று அவன் உள்ளம் உறுமிக் கொண்டிருந்தது.

கடைசியாக, ஹீரா தன் மதி முகத்தை ஒரு உயர்ந்த சல்லாப் பட்டினால் மறைத்தவண்ணம் நாணிக்கோணி வந்து நின்றாள். ஒளரங்கசீப்பின் கண்களிலே களிப்பு வழிந்தது. பாய்ச்சலாக அவளருகே சென்று அவள் போர்த்தியிருந்த துணியை எடுத்து வீசியெறிந்தான்.

"பெரியம்மா, இவள் தான் நான் சொன்னது..."

"ஓ... இவளா... இவளும் அடிமைப் பெண்தான்; பெயர் ஹீரா"

"யார் இவளை அடிமைப் பெண்ணென்று கூறமுடியும்?"

பேகம் உள்ளுக்குள்ளேயே சிரித்துக்கொண்டு "பின் இவள் ராஜகுமாரியா?" என்றாள்.

"எனக்கு அப்படித்தான் தோன்றுகிறாள். இப்பேர்ப்பட்ட அழகியை நான் ஒருபோதும் அடிமைப்பெண் என்று கூப்பிட மாட்டேன்..."

ஹீரா தனக்குத் தானே சிரித்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு நகர முயன்றாள்.

"எய், எங்கே போகிறாய்? நில்!" என்றான் இளவரசன். ஹீராவும் பதுமைபோல் நின்றாள்.

"பெரியம்மா, போகும்போது இவளையும் நான் உடனழைத்துச் செல்லவேண்டும்..."

"ஏன்?"

"ஏனா? எனக்காகப் பிறந்தவளை இங்கு விட்டுவிட்டா செல்வது?... பெரியம்மா, நான் இத்தனை சொல்வதிலிருந்து நான் இவளை விரும்புகிறேன் என்று தெரியவில்லையா?"

"தெரிகிறது... ஆனால் இது விஷயத்தில் நான் ஒன்றும் செய்வதற்கில்லையே!"

"ஏன்?"

"ஜனுப்பின் காதிற்கு இது எட்டினால்..."

"என்ன செய்துவிடுவார்...? இந்த ஒளரங்கசீப்பை எதிர்க்க அந்தக் கிழவனுக்குத் தைரியமிருக்கிறதா...?"

"இவளை அவர் தலைமேல் தூக்கிவைத்துக் கொண்டல்லவா கூத்தாடுகிறார்..."

"கூடாது... அந்த நரை மயிர்க்கிழத்தினிடம் இவள் இனி அரைக்கணம் கூட இருக்கக் கூடாது. என்ன, நான் சொல்வது..."

"நான் அவரிடம் இதைப் பற்றிப் பேசுகிறேன்..."

"பேசுவதாவது, போவதாவது... இரண்டில் ஒன்றுதான் என்னிடம்... ஹீரா எனக்கு வேண்டும்... தட்டிப்பேச யாருக்காவது தைரியமிருந்தால் முன் வரட்டும்... உம்..."

"சரி ஆகட்டும் தம்பி..."

* * *

அன்று இரவு கிழ ஜனுப் அழுது வடியும் முகத்துடன் ஹீராவைச் சந்தித்தார். கூம்பிய தாமரைபோல வெளிறிச் சுணங்கியிருந்தன அவள் கண்கள்.

“ஹீரா, நான் சொன்னேனே கேட்டாயா?”

“என்ன சொன்னீர்கள்?”

“அந்தப் பொல்லாத பயலின் முன் வரவேண்டாமென்று சொன்னேனே, கேட்டாயா?”

“உம்...”

“போ...கோழிக்குஞ்சைப் பருந்து பற்றிச்செல்வது போல் உன்னைக்கடத்திச்சென்று விடப் போகிறான்...”

“உம்...”

“ஹீரா...என் மேல் உனக்கு ஆசையில்லையா?”

“நான் எப்போது சொன்னேன்...?”

“இந்தச் சாம்ராஜ்யத்துக்கே உன்னை ராணியாக்குவேன்...”

“செய்யுங்கள்...”

“உன் ஏவலனைக் கைகட்டிச் சேவகம் செய்வேன்...”

“ஆகட்டும்...”

“அப்படியானால்........”

“என்ன, அப்படியானால்...”

“நானே நீ அவனுடன்...”

“நான் என்ன செய்ய முடியும்...”

“நீ நினைத்தால் நீ இங்கேயே கூட இருக்கலாம்...”

“நடக்கக்கூடியதா இது...”

“நடக்கும், நீ நினைத்தால்...”

“எப்படி”

“அந்தப் பயலை நீ வெறுக்க வேண்டும்... ஏன் மௌனமாக இருக்கிறாய்?. அவன் முரடன்... சில நாளைக்கெல்லாம் உன்னைக் கசங்கிய மலரென்று தூர எறிந்துவிடுவான்”

“பயம் காட்டுகிறீர்...”

“உண்மையிலே அவன் அப்படித்தான் செய்யப்போகிறான். அதை இப்போது உணர மாட்டாய் நீ.”

“இப்போது என்ன செய்ய வேண்டுமென்கிறீர்?”

“அவன் உன்னைத் தன்னுடன் கூப்பிட்டால் வரமுடியாதென்று மறுத்துவிடவேண்டும்.”

“அவர் விட்டுவிடுவாரா? சாட்டையால் அடித்துக் குதிரையில் கட்டியல்லவா கொண்டு செல்வார்...”

“நீ வருவதற்கு ஒரு நிபந்தனை விதி... அவனால் அதைச் செய்யவே முடியாது...பையன் வேறு வழியின்றித் திரும்பி விடுவான்...”

“என்ன நிபந்தனை?...”

“ஒரு கிண்ணம் மது அருந்தினால்தான் உன்னுடன் வர முடியும் என்று கூறிவிடு...குர்ரானை உயிரினும் மேலாகக் கருதும் அவன் ஒருபோதும் மதுவைத் தொடக்கூட மாட்டான்...என்ன?”

“மெய்யாகவா?...”

“உண்மைதான்.......இப்படி மட்டும் நீ அவனை ஏமாற்றி விரட்டிவிட்டால், பின் நீ தான் இந்த நாட்டுக்கு ராணி...”

ஹீரா தலையாட்டிவிட்டு, ஒரு புன்னகையையும் சிந்திவிட்டு நடந்தாள். ஜனுப்பும் அரைகுறை மனத்துடன் நகர்ந்தார்.

ஔரங்கசீப் டில்லிக்குத் திரும்ப எல்லா ஏற்பாடுகளையும்

செய்துவிட்டு ஹீராவிடம் வந்தான்.

"உம்...உம்... சீக்கிரம்..."

ஹீரா கடைக்கண்ணால் உல்லாவைப் பார்த்துக் கொண்டே, தன் கட்டை விரலால் நிலத்தைச் சீண்டிய வண்ணம் மௌனமாக நின்றாள்.

"உன் தயக்கத்திற்கு என்ன காரணம்" என்று உறுமினான் இளவரசன்.

மீண்டும் மௌனம்!

"வருகிறாயா, இல்லையா?..."

"வருகிறேன் ...ஆனால்..."

"என்ன ஆனால்..."

"ஒரு நிபந்தனை! எங்கள் நாட்டு வழக்கம்?..."

"என்ன அது?..."

"ஒரு பெண் தன் கணவனை ஏற்றுக்கொள்ளு முன் மதுவை அருந்தவேண்டும்..."

"ஹீரா..."

"ஆமாம்...எங்கள் நாட்டுச் சம்பிரதாயம் அது. மீற முடியாது"

"சரி... அருந்து..."

"நான் மட்டுமல்ல..."

"என்ன ?"

"முதலில் தாங்கள் அருந்தி விட்டுத் தரவேண்டும் ... அந்த மிச்சத்தை நான் அருந்த வேண்டும்..."

"சே...சே ... நானா... ஒருக்காலும் முடியாது......"

ஆயிரம் தேள்கள் ஏககாலத்தில் கொட்டியது போலிருந்தது ஔரங்கசீப்பிற்கு. 'கனவில் கூட நினையாத மதுவை அருந்துவதா? உயிரே போனாலும் கூடத் தொடக் கூடாதே!...'

ஹீரா பயந்தவள் போல் நடித்து "அப்படியானால் என்னை மறந்து விட வேண்டியதுதான்......" என்றாள் மெல்லிய குரலில்.

"மறந்துவிடுவதா?......உன்னையா?..."

"முடியவில்லையானால் பின் தயக்கமென்ன மதுவருந்துவதற்கு..."

இருதலைக்கொள்ளி எறும்பு போலானான் இளவரசன். ஹீரா வேண்டுமானால் தன் விரதத்திலிருந்து தவறியேயாக வேண்டும். அது அவனது உயிரையே பிரிப்பது போலாகும்.

'ஹீரா! மது!'— இந்த இரண்டும் அவன் நெஞ்சத்தில்

மதபோதகர் :
நான் எல்லோருக்காகவும் பிரார்த்திக்கிறேன்.

வக்கீல் :
நான் எல்லோருக்காகவும் வாதாடுகிறேன்.

டாக்டர் :
நான் எல்லோருக்காகவும் மருந்து எழுதிக் கொடுக்கிறேன்.

பொதுஜனம் :
நான் எல்லோருக்காகவும் பணம் கொடுக்கிறேன்.

ஒரு போராட்டம் நடத்தின. மாறி மாறிச் சுழன்றன. ஒரு வலியை எழுப்பின. இமே ஜனுப்புக்குக் குதூகலம் தாங்கவில்லை. அடிக்கடி ஹீராவைப் பார்த்து நன்றி தெரிவிப்பவன் போல் புன்னகை புரிந்தான்.

நீண்டநேரப் போராட்டத்திற்குப் பின்னும் அவன் எரியும் உள்ளத்தில் ஹீராவே தலை நிமிர்ந்து நின்றாள். கொள்கை, விரதம், சத்தியம், வைராக்கியம், பிடிவாதம், உயிருக்கும் மேலான குர்ரான் எல்லாம் காற்றில் பறந்தன. கேவலம் ஒரு பெண்ணுக்காக எல்லாவற்றையும் துறந்து மதுக்கிண்ணத்தைக் கையிலெடுக்கத் துணிந்துவிட்டான்.

மது தருவிக்கப்பட்டது. குர்ரானும், கொள்கையுமே உருவாய் நின்ற ஔரங்கசிப், பிடிவாதக்காரனை ஔரங்கசிப், பிற்காலத்தில் சரித்திரத்தில் பெரும் புகழும் பெற்ற ஔரங்கசிப், தமையன்மாரையும், தந்தையையும் கொன்று தாணியாளச் சிம்மாதனமேறிய ஔரங்கசிப் ஒரு பெண்ணுக்காகத் தன் வாழ்நாளிலேயே குடித்தறியாத, குடிக்க விரும்பாத, குடிக்கக் கூடாது என்று உறுதி பூண்டிருந்த மதுவை எடுத்துக் குடிக்க வாய்வரைக்கும் கொண்டு சென்றுவிட்டான்.

பெண்ணாசை அவன் கண்களையும், கருத்தையும் மறைத்து அந்தகாரத்துக்குள்ளே தள்ளிவிட்டது. அடுத்த விநாடி...

ஹீரா தாவித் தன் கையால் மதுக்கிண்ணத்தைத் தட்டிவிட்டாள். கிண்ணம் கீழே விழுந்து சுக்குநூறாயிற்று. மது சிதறித் தெளித்து நாற்றத்தை வீசியது. அவனது விரதம் பாழாவதை ஹீராவால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. தனக்காக, தன் அழகுக்காக உயிரினும் மேலான கொள்கையை உதறியெறிந்து விரதபங்கத்துக்கு ஆளாகப் போகும் இளவரசனை அவள் மனமார நேசித்தாள். அவன் மார்பிலே தன்னைப் புதைத்துக் கொள்ள விரும்பினாள்.

உறுதியிழந்த ஒருவன் தனக்குக் கணவனாக, காதலனாக வருவதைவிட, உறுதி யிழக்காத உத்தமனாகவே அவன் இருக்கட்டும் என்றுதான் தட்டிவிட்டாள் மதுக்கிண்ணத்தை. பஞ்சவும் நெருப்பும் பற்றிக் கொண்டன! கிழ ஜனுப் சொல்ல முடியாத ஏமாற்றம் கண்டான். எது நினைத்தானோ அது நடந்துவிட்டது. ஹீரா இனி அவனுக்கில்லை... ஹீராவை அவன் இனிப் பார்க்கவும் முடியாது!

தூரத்தே செல்லும் குதிரையையும் அதன்மேல் இளவரசனும் ஹீராவும் அமர்ந்து செல்லும் காட்சியையும் கண் கொட்டாது பார்த்துக்கொண்டேயிருந்தான் கிழவன். அவன் கண்களிலிருந்து முத்து, முத்தாகக் கண்ணீர்த்துளிகள் உருண்டோடி வந்து நரைத்துப்போன அவன் மீசையின் விளிம்பிலே நின்றன!

காதல் புதிர்

எஸ். ஆறுமுகம்

தோழி, என் வாழ்வில் என் காதல் நினைவுகளைப்பற்றி உனக்குக் கூறும்படி நீ கேட்டிருக்கிறாய். எனக்கு வயதாகிவிட்டது. உறவினர் இல்லை; குழந்தைகள் கிடையாது. ஆகையால் நான் உன்னிடம் என் உள்ளத்தைத் திறந்துசொல்கின்றேன்; குற்றத்தை ஒப்புக்கொள்ளுகின்றேன். என் பெயரை நீ யாரிடமும் வெளியிடக்கூடாது. உறுதிதானே!

நான் பிறரால் பெரிதும் காதலிக்கப்பட்டேன்; நேசிக்கப்பட்டேன். நான் என்னையே நேசித்தேன். நான் அந்நாளில் மிகவும் அழகாக இருந்தேன். என்வரை காதல் என்பது உடலின் உயிர், உடலின் உயிராகக் காற்று அமைவதுபோல. நேசம் யாருக்கும் என்மீதில்லையென்றால், எப்போதும் என்னைப் பற்றிக் கவனிக்க யாருமில்லையென்றால் என்றோ நான் இறந்திருப்பேன். இதயத்தின் பூரண சக்தியுடன் பெண்கள் ஒரே ஒரு முறைதான் காதலிப்பதாகப் பாவனை செய்கிறார்கள். என்வரை அது புரட்சிகரமானதொரு நினைவு; முடிவு பெறாத புதிர்வட்டம்! அவை எப்படியே தன் போக்கி புதைந்து போயின.

குற்றமற்றவளான நான், விபரீதச் சூழ்நிலைக்கு இலக்கான துணிகரச் செயல்களில் ஒவறை



இப்போது சொல்கிறேன். அந்தப் பயங்கரமான பெக் மருந்துவியாபாரியின் பழியும் வஞ்சமும் என் நினைவுக்கு வருகின்றன.

ஹொர்வ் என்ற பணக்காரருக்கு அப்போது நான் வாழ்க்கைப்பட்டிருந்தேன். நான் அவரைத் துளியும் காதலிக்கவில்லை. உண்மைக் காதலுக்கு அன்பும் சுயேச்சையுமல்லவா தேவை? சட்டம் அனுமதித்து, மதபோதகரால் ஆசிர்வதிக்கப் பட்டது எங்கள் காதல். இதை உண்மைக்காதல்என்று எப்படிச் சொல்லமுடியும்? கள்ளத்தனமாகப் பெறும் முத்தத்தைப் போல நியாயவழியில் கிடைக்கும் முத்தம் ஒருபோதும் சுவை பெறுவதில்லை. என் கணவர் உயரமாகவும் அழகாகவும் இருப்பார். ஆனால் அவருக்கு அறிவு கிடையாது. கீழ்த்தரமான மொழியில் அவர் அடிக்கடி பேசினர். தன் அபிப்பிராயங்களை வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறுவார். சிறிதும் உணர்ந்தோ, சிந்தித்தோ பார்க்காமல், மனதில் எழும்பும் எண்ணங்களை அக்கணமே வெளியிட்டுவிடுவார் அவர்.

நாங்கள் வசித்துவந்த வீடு நகரத்திற்குப் புறம்பாக அமைந்திருந்தது. சூழப் பலவகையான மரங்கள் இருந்தன. பூங்கா உண்மையாகவே ஒரு காடு போலவே தென்பட்டது. அருகில் தண்ணீர்க்குட்டைகளும் இருந்தன. ஓடையின் சமீபத்தில் என் கணவருக்கெனத் தனியான சிறு குடிசை அமைந்திருந்தது, காட்டு வாத்துக்களை வேட்டையாடிச் சுடுவதற்கென.

எங்கள் வீட்டு வேலைக்காரர்களில் ஒருவன் புத்தியற்றவனாக, ஒருவகைப் பைத்தியம் போலிருந்தான். கூட ஒரு பணிப்பெண்ணும் வேலை செய்தாள். அவள் எனக்கு வேண்டியவள். ஐந்து ஆண்டுகளுக்குமுன் அவளை நான் ஸ்பெயினிலிருந்து அழைத்து வந்திருந்தேன். , அவள் அனாதைச் சிறுமி. அவள் அழகுக்கு அவளை ஒரு நாடோடிப்பெண்ணாகத்தான் பாவித்திருப்பார்கள். அவளுக்கு அப்போது வயது பதினறு. என்றாலும் இருபது வயதுபோலக் காணப்பட்டாள்.

இலையுதிர்காலம் தொடங்கியது. அருகில் உள்ள பிராந்தியங்களில் நாங்கள் வேட்டையாடினேம். அப்பொழுது அங்கு ஒரு அழகிய இளைஞனைக் கண்டேன். அவன் வரவு அடிக்கடி நிகழ ஆரம்பித்தது. பிறகு அவன் வருவதை நிறுத்திக் கொண்டான். அதைப்பற்றி எதையும் நான் சிந்திக்கவில்லை. ஆனல் என் கணவர் என்னைப் பற்றியிருந்த நல்லெண்ணத்தில் ஏதோ சலனம் கண்டவர்போல நான் உணரலானேன்.

அவர் போக்கே திசைதிரும்பி விட்டது. என்னேடு அவர் அன்புடன் பேசுவது நின்றது. முத்தமிடுவதும் இல்லை. என் அறைக்கும் அவர் வருவது கிடையாது.

தனித்தனியே நாங்கள் இருவரும் வசிக்க வற்புறுத்தினேன். இரவுகளில் அடிக்கடி என் அறைக்கு அண்மையில் மெல்லிய பாதஒலி கேட்பதையும், சற்றைக்கெல்லாம் அது மாய்ந்து போவதையும் கேட்க முடிந்தது. என் கணவரிடம் இதைப்பற்றிச் சொன்னேன். என்னையே சில விநாடி பார்த்துவிட்டு அவர் மறுமொழி சொன்னார்: "அது ஒன்றுமில்லை. நம் வேலைக்காரன்..."

★

ஒருநாள் மாலை என் புருஷன் ஹெர்வ் மிகக் குதூகலத்துடன் என்னிடம் வந்து "அன்பே, நம் கோழிகளைத் தின்னத் தினமும் வரும் குள்ளநரியைச் சுட வேண்டி இன்று துப்பாக்கியுடன் காட்டிற்குப் போகிறேன். நீயும் என்னுடன் வருகிறாயா?" என்றார்.

நான் ஆச்சரியப்பட்டேன். தயக்கமடைந்தேன். என்னையே விபரீதமாகப் பார்த்து நின்ற அவரிடமே "ஓ, நிச்சயமாக வருகிறேன், அன்பரே" என்றேன்.

ஆனால் என் பதி திடீரென்று முகம் மாறிவிட்டார். மாலை முழுதும் அவர் குழம்பிப் போய்க் காணப்பட்டார்.

பத்துமணி அளவில் அவர் என்னிடம் "நீ புறப்படத் தயார்தானே?" என்றார்.

நான் எழுந்து புறப்பட்டேன். என் துப்பாக்கியை அவர் சுமந்திருந்தார்.



"ரவைக் குண்டுகளைத் துப்பாக்கியில் செலுத்தவேண்டியது தான்" என்றவண்ணம் சுடும் விதத்தை விநோதமாகக் காட்டினார் அவர்.

"மனம் இதமுறும் குளுமை நிலவுகிறதல்லவா?"

நான் சிரித்துக்கொண்டேன்.

"குளிர்......ஆமாம்; இன்றைக்கு நான் நரி ஒன்றைக் கொல்லப் போகிறேன். நீ என்ன நினைக்கிறாய்?"

பூங்காவைத் தாண்டி நாங்கள் நடந்து சென்றோம். மங்கிய பழைய அக்கட்டடத்திற்கு மூலாம் பூசுவதுபோல மஞ்சள் நிறத்தைப் பூரணச்சந்திரன் கொடுத்துக்கொண்டிருந்தான்; அதன் மேல் தளம் நின்ற கூரை மின்னிக்கொண்டிருந்தது. இரவின் மோன அமைதியை எந்தச் சத்தமும் கலக்கவில்லை. பூந்தோட்டத்தின் மரத்து நிழலில் நாங்கள் உட்கார்ந்திருக்கையில், ஏதோ ஒரு புது உணர்வு என்னுள் பரவியது, உதிர்ந்து விழுந்த இலைகளின் மணத்துடன். என் கணவர் ஒன்றும் சொல்லவில்லை; அவர் உற்றுக் கவனித்துக்கொண்டிருந்தார். வேட்டைக்கென எதையோ குறிவைத்து நகர்ந்து பார்த்த வண்ணம் காணப்பட்டார்.

ஓடைகளின் விளிம்பை நாங்கள் அடைந்தோம்.

எங்கும் மயான அமைதி காணப்பட்டிருந்தது. காற்றுக் கூட அசையவில்லை. தண்ணீர் மட்டும் சலனமடைந்து காணப்பட்டது; சமயங்களில் ஒளிக்கதிர்களும் ஒன்றுகூடின.

நாங்கள் தங்கவேண்டிய குடிசையை அடைந்த சமயம், என் கணவர் என்னை முதலில் போகச்செய்தார். பிறகு அவர் ரவைகளைத் துப்பாக்கியில் செலுத்தினார் மெதுவாக. துப்பாக்கிப்பொடியின் நாற்றம் பிடிக்கவில்லை. நான் பயந்து நடுங்குவதைக் கண்டுகொண்ட என் கணவர் "இந்தச் சோதனை உனக்குப் போதுமல்லவா? அப்படியானால் பின்செல்..." என்றார்.

நான் மிகுந்த பரபரப்படைந்தேன். "ஊஹூம்...எதுவும் செய்யாமல் பின்னால் போக மாட்டேன். இன்று மாலை நீங்கள் அதிசயமாகக் காணப்படுகிறீர்களே......" என்றேன் நான்.

"உன் விருப்பம்......"—கூறிவிட்டு நகராமல் அங்கேயே தங்கிவிட்டார்.

அரைமணி நேரம் கடந்தபின், அந்த இரவின் அமைதியை எதுவும் கலக்காத நிலையிலே நான் மெல்லிய குரலில் "அவன் இவ்வழிதான் செல்கிறான் என்பதை நீங்கள் உறுதியாக நம்புகிறீர்களா?" என்று கேட்டேன்.

ஹெர்வ் என் மீது கோபம் கொண்டவராகக் காதடியில் "நான் இவ்விஷயத்தில் உறுதியாக நம்புகிறேன்" என்று முணுமுணுத்தார்.

மீண்டும் மௌனம் நிலவிற்று.

என் கணவர் என் காங்கை அழுந்தப் பற்றியபோது என்



குடைக்காரர் : என்ன ஓய், நேற்று இடி இடித்ததே, கேட்டீரா ?

மற்றவர் : அப்படியா ?

குடைக்காரர் : இடியென்றல் வானமும் பூமியும் வெடித்தாற்போல்லவா இடி இடித்தது.

மற்றவர் : என் என்னை அப்போதே எழுப்பவில்லை ? இடி இடித்தால் எனக்குத் தூக்கமே வராதே...

உடல் நடுங்கிற்று; அவரது குரல் மாறிக் காண்பித்தது.

"மரத்தின் அடியில் உன்னல் அவனைப் பார்க்க முடிகிறதா ?" அவர் வினவினர்.

தூரத்தே பார்வையிட்டேன். எதுவும் புலப்படவில்லை. ஹெர்வ்—என் கணவர் என் முகத்துக்கு எதிரே தன் விழிகளைப் புதைத்தவாறு கையிலேந்திய துப்பாக்கியுடன் மெதுவாக நகர்ந்து வந்தார்.

நானும் சுடுவதற்கு ஆயத்தம் செய்துகொண்டிருந்தேன். எங்களுக்கு முப்பது அடிகளுக்கு எதிரே ஒருவன் வெகு விரைவாகக் குனிந்த தலையுடன் தப்பிக்க முயல்வனைப்போல ஓடிவந்துகொண்டிருந்தான்.

என்னையறியாமலேயே நான் பலத்த கூக்குரலிட்டேன். திரும்புவதற்குள் என் கண்களில் ஏதோ ஓர்மின்னல் தோன்றியது. குண்டுபாயப்பட்ட ஓநாயைப் போல, பாவம் அந்த மனிதன் பூமியில் அப்படியே சுருண்டு விழுந்துகொண்டிருந்தான்.

உடல் கிடுகிடுத்தது; உள்ளம் உறைந்து போய்விட்டது. அலறினேன். பைத்தியம் பிடித்துவிடும் போலானது. ஹெர்வின் கரங்கள் என் குரல்வளையைப் பற்றின ! நான் தரையில் மயங்கி விழுந்தேன்.

என்னைப் பற்றி இழுத்த வண்ணம் அவர் ஓடினர்—ஓடிக்கொண்டேயிருந்தார், புல்தரை மீது சாய்ந்துகிடந்த அந்த மனிதனைக் காணும்வரை. உடனே என்னைப் டடீரென்று வீசித்தள்ளி விட்டார், என் தலையை இரண்டு துண்டாகப் பிளக்க விரைந்தவர் மாதிரி.

அவர் என்னைச் சாகடிக்கப் போகிறார் என்று திட்டமாகத் தோன்றியது. என்ன நடந்தது என்று பார்க்கக் கண்களைத் திறக்கக்கூட விடாமல் அவர் என் முகத்தைப் பலமாகப் பற்றியிருந்தார்.


வீறுகொண்டவளாக நான் எழுந்தேன்.

அந்த மனிதனின் உடல் மீது மண்டியிட்டவாறு போக்விடா— என் பணிப்பெண் அவனது முகத்தை, தாடியைத் தடவியவளாக அழுதுகொண்டிருப்பதைப் பார்த்தேன். பிறகு, அவள் இறந்த அந்த மனிதனைச் சுற்றிக் கைகளைப் பரப்பி அவன் முகத்தில், கண்களில், உதடுகளில் முத்தமிட்டாள் பலப்பல முறையாக.

என் கணவர் என்னைப்பற்றிப் பிடித்த வண்ணம், என்னை உற்றுப் பார்க்கலானார். அவர் என்னைப் புரிந்துகொண்டவர் போன்று, என் பாதங்களில் மண்டியிட்டு "அன்பே, என்னைத் தயவுசெய்து மன்னித்துக்கொள். நான் உன்னை வீணே சந்தேகித்தேன். இந்தப்பெண்ணின் காதலனை நான் அநியாயமாகக் கொன்றேன்......என்னை ஏமாற்றிவிட்டான் நம் வேலைக்காரப் பயல்..." என்றார் நா தழுதழுக்க.

ஆனால், இறந்த தன் காதலனுக்கு, உயிர் வாழ்ந்த அந்தப் பெண் ஈந்த அதிசயமான அன்பு முத்தங்களை, அவள் அழுகை ஓலங்களை, காதல் புதிராகிவிட்ட அவளது கருகிய உள்ளப் பெருமூச்சைத்தான், நான் கவனித்துக் கொண்டிருந்தேன். அக்கணமே, என் கணவரிடம இனி நான் நன்றியுடன் அன்பு பாராட்டலாகாது என்று திட்டமாகப் புரிந்து கொண்டேன் !

[மூலம் : மாப்பஸான்]





தென்றலிலே தேமலர்கள் கூட்டும் வாசம்
தேடிவரும்! என் மனதைக் கிள்ளும்! அள்ளும்!
முன்றிலிலே வளர் கொடியில் முல்லைப் பூக்கள்
முறுவலிக்கும்! என் உணர்வும் மோதும் வானே!
"குன்றினிலே, ஆற்றோரக் குளிர் பூங்காவில்
குளுகுளுக்கும் நிலவொளியில் எல்லாம் ஆடிச்
சென்றிடுவோம்! வா!" என்றேன் காதல் பொங்க!
சினந்துவிழித் தீவார்த்தாள் வஞ்சிப் பெண்ணாள்!

"நிலவொளியின் இனிமையிலே நெஞ்சம் அள்ளும்
நினைவினிலே கனவினிமைக் கவிதை துள்ளும்!
கலகலெனக் களியுடனே பாடிப் போவோம்!
கண்மணி, நீ வா!" என்றேன். "வருதற்கில்லை!
புலனதிலே திறனில்லை! சற்றே ஓய்வாய்ப்
பொழுதினையே கழித்திடலாம்!" என்றே சொல்லிச்
சில அடிகள் சென்றாள்; பின் கட்டில் சேர்ந்தாள்
சிரித்திட்டாள், குறும்புடனே! தூங்கிப் போனாள்!

நள்ளிரவில் எனைத்தட்டி எழுப்பிட்டாள்! நான்
நாற்புறமும் திருதிரெனப் பார்க்கும் போதில்
துள்ளிவரும் மகிழ்வோடென் கரம் பற்றிட்டாள்.
"தொலைதூரம் செல்வோம் நாம்! வா!" என்றிட்டாள்.
"கள்ளி, அடி காரிருளின் கோலம் பாராய்!
கண்ணுறங்கும் உயிரினத்தின் மோனம் கேளாய்
சள்ளைசெயும் நிசியினிலே எங்கே செல்ல?
சாந்தமுடன் துயில் புரி நீ சற்றே!" என்றேன்

மீன்விழியின் கோணமதில் மின்னல் காட்டி
மெய்சிலிர்க்கும் மோகனத்தின் கள்ளைக் கூட்டி
நான்மயங்கக் கெஞ்சிட்டாள்! "நட" என்றிட்டாள்.
நாற்புறமும் பார்த்திட்டேன்! கொள்ளை கொள்ளும்

மை

நா.சி.வரதராசன்

தேன் முகத்துப் பெண்மணியின் தேசில் சொக்கித்
திரள் கரங்கள் நீட்டியவள் மலர்க்கை பற்றி
வான் முகட்டின் தாரகைகள் கீதம் பாட
வல்லிருளில் நல்லொளிகள் காணச் சென்றேன்.

கும்மிருட்டில், குளிர் இருளில், தெருவோரத்தில்
குப்பைகளைத் தலையணையாய்க் கொண்டோர் கூட்டம்
பம்மியுறை தொல்லை தரும் வாழ்வும், எங்கோ
பசியாலே துடி துடிக்கும் பிள்ளை நெஞ்சம்
விம்முதலும், ஆங்கோர் பெண் கணவன் இல்லாள்,
வேதனையால் வேற்றானோடிருளில் ஒண்டும்
இம்மை—உடல்—இன்பத்தின் வேட்கைத் தீயும்
எத்தனையோ இடர் நிலையும் கண்டேன்! நொந்தேன்!

"மாளிகையும், மாலைபெயும் மயக்கத் தேனும்,
மலர்வனமும், ஒளியுலகும் கண்டால் போதும்!
நீளிருளில் ஏன் செல்லல் வேண்டும்! என்றாய்.
நேரெதிரே காண்! வாழ்வில் உயிர்கள் வேகும்
சூளையினை இருளுலகின் நெஞ்சில்!" என்றாள்.
சொல்லரிதாய்ச் சோகமதின் வெள்ளம், என்னைக்
கூளமெலாம் போக்கிவெறிக் கூத்தாய்ப் பொங்கி,
குமைந்ததுபார்! புத்துணர்வும் பொங்கக் கண்டேன்!

"போதை வெறிக் கூத்தினிலே வாழ்வைக் காணல்
பொய்யுலகக் கட்டுரைகாண்! நேரில் இங்கே
வீதியிலே, இவ்விருளின் நெஞ்சம் காட்டும்
மெய்யுலகம் பார்" என்றாள். என்தன் நெஞ்சச்
சோதியினுக்கோர் விளக்காம் கவிதைப் பெண்ணாள்!
சொல்லழகுத் தேமொழி என் வஞ்சித் தெய்வம்!
மேதினியின் இயல்புணரப் புறப்பட்டேன் நான்!
மென்கவிதை நல்லொளியில் உண்மை காண்பேன்!



இருளும் ஒளியும்

'அஜஸ்'


"படிக்காதவன்தான் அழுவறான்னு
படிச்சவனுமில்லெ அழுவறான்;
இல்லாதவன்தான் தவிக்கிறான்னு
இருக்கிறவனுமில்லெ தவிக்கிறான்;
இந்த நிலைக்கு விடிவு காலம்
இப்போதைக்கு இல்லையா?"

அந்த வயலிலே கண்ணுக் கெட்டிய தூரம்வரை தெரிந்த தலைகள் அவ்வளவும் அந்தப் பாட்டில் மெய்மறந்தோ என்னவோ, இப்படியும் அப்படியுமாக ஆடின. சிறு சிறு கொட்டகைகள் போட்டுக்கொண்டு வெற்றிலை பாக்குக்கடையும், டீக் கடையும் வைத்திருந்தவர்கள் கூடத் தங்கள் வியாபாரத்தைக் கவனியாமல் அந்த உயர்ந்த கொட்டகை அரங்கையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். உண்மையாகவே அந்தப் பாட்டு நன்றாகத்தான் இருந்தது. எந்தக் கவிஞன் பாடினதோ தெரியவில்லை. ஒருவேளை அந்தத் தெருக்கூத்து பபூனின் சொந்தக் கவனமாயுமிருக்கலாம். நவீன சாதனமான ஒலிபெருக்கி இல்லாமலேயே கேட்போர் காதில் சில விநாடிகள் ரீங்காரம் செய்யும்படியாக அவன் அனுபவித்துப் பாடிக்கொண்டிருந்தான். கோணங்கி மாதிரி உடை அணிந்திருந்தாலும், அரிதாரம் பூசிய அவன் முகம் அந்த இரு 'காஸ் லைட்'டுகளின் ஒளியில் நல்ல அழகான முகவெட்டுடையவன் என்று சொல்லும்படி இருந்தது. எங்கும் ஒரே கும்மிருட்டாயிருந்ததால் அவ்விளக்குகளின் வெளிச்சம் வழக்கத்தை விடக் கண்ணைப் பறித்தது. அவனுக்குப் பின்னால் காற்றில் அசைந்தாடிக்கொண்டிருந்த படுதாவில் யாரோ ஒரு 'கத்துக்குட்டி' தீட்டிய வர்ணச்சித்திரம் பாதி அழிந்தும் அழியாமலும் இருந்தது. ஹார்மோனியக்காரரும், டோலக்காரரும் அவன் பாட்டுக்கேற்பப் பின்னணி வாசித்து அழகுபடுத்திக்கொண்டிருந்தார்கள்.

அந்தப் பாட்டைக் கேட்டபடி கந்தன் வரப்பின்மீது நடந்து போய்க்கொண்டிருந்தான். எனினும், இதன் கருத்தை அவன் வாங்கிக்கொள்ளவில்லை. காரணம் அவன் மனம் தன் சிரமமான குடும்ப வாழ்க்கையைப்பற்றிப் பலவிதமாக எண்ணிக்கொண்டிருந்தது. அந்தப் பக்கம் ஒரு தடவைதான் திரும்பிப் பார்த்தான். அதற்குமேல் அதைக் கவனிக்க அவனுக்கு ஆசை

யில்லை. கொஞ்சம் வேகமாகவே நடக்க ஆரம்பித்தான். வழக்கத்தைவிட அவனுக்கு அன்று கொஞ்சம் நேரமாகிவிட்டது. சிக்கிரம் போகாவிட்டால் அவன் மனைவி செங்கமலம் கோபித்துக் கொள்ளுவாள். பகல் முழுதும் வேலைசெய்த களைப்பால் வீட்டுக்குப் போனதும் சாப்பாடு முடித்து அயர்ந்து படுக்கத்தான் அவன் விரும்புவான். ஆனால், செங்கமலத்துக்குக் கூத்து என்றால் உயிர். ஆரம்பிக்கும் முன்பாகவே போய்த் தயாராக உட்கார்ந்துவிடுவாள். இன்று தான் நேரம் கழித்துப் போவதால் நிச்சயம் அவள் வாயில் அகப்பட்டுக்கொண்டு விழிக்கத்தான் வேண்டும் என்று தெரியும் அவனுக்கு அதனாலேயே அவசர அவசரமாக நடந்தான்.

குடிசையின் வாசலில் புகைந்துகொண்டிருந்த சிம்னி விளக்கின் அருகில் உட்கார்ந்துகொண்டிருந்த செங்கமலம், அவன் வரும் வழியைப் பார்த்தவாறு என்னென்னவோ முணுமுணுத்துக்கொண்டிருந்தாள். கந்தனைக்கண்டதுதான் தாமதம், அவளுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. சிம்னியைக் கையில் எடுத்துக்கொண்டு எழுந்து குடிசைக்குள் நுழைந்தவாறு, "ஒங்களுக்கு இதெல்லாம் புடிக்காட்டி, எதிராளிக்கும் புடிக்காமெத்தான் இருக்கணும் போல இருக்கு. நேத்திலே வந்துடுவீங்களே தெனமும். இன்னிக்கு நான் சொல்லியிருந்தேன் இல்லே சிக்கிரமா வந்துடுங்கன்னு. அதான் ஆடி அசைஞ்சுக்கிட்டு வாரீங்க, உங்க கெட்ட எண்ணத்தை..." என்று அவள் சுவாதீனத்தோடு கோபித்துக்கொண்டாள். அவனுக்கு உடம்பு அடித்துப் போட்டது போல இருந்தது. வயிற்றைக் கிள்ளிக்கொண்டிருந்த பசிவேறு அவனை வேதனைக்குள்ளாக்கியது. இப்படிப்பட்ட தருணத்தில் அவள் இவ்வாறு பேசியதைக் கேட்கவே அவனுக்கும் கோபம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. "என்ன நெனைச்சிட்டிருக்கே புள்ளே, கொஞ்சம் அடக்கியே வார்த்தையை விடு. உயிரைக் கொடுத்துட்டு ஒண்ணரை ரூவா வாங்கியாரேன், தெரியுமா? கூலியை வாங்கிட்டுத்





தானே வந்தாவனும். ஹூம், நீ இருக்கிற பவுசுக்குக் கூத்து இல்லாமெத்தான் அழுவுதோ?" என்று கத்தினன்.

அவள் இதற்குப் பதில் ஒன்றும் சொல்லவில்லை. ஏதேனும் பேசினல் கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு அடிக்க ஆரம்பித்து விடுவான் என்பது அவளுக்குத் தெரியும். அதற்காக அவனை முரடன் என்று சொல்லிவிட முடியாது. பசி வேளையில் கோபம் வந்தால் கொஞ்சம் கடுமையாகத்தான் வரும்.

அவள் ஒரு அலுமினியத் தட்டை எடுத்துப் போட்டு அதிலே சுடச் சுடச் சோற்றைப் பரிமாறினள். அவன் உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தான்.

சாப்பிட்டானதும் வாசலுக்கு வந்து காற்றுட உட்கார்ந்து வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டான். புகையிலையை அடக்கிக்கொண்டதும்தான் அவனுக்குத் தெம்பு வந்தது.

அவன் தன் வேலையை முடித்துக்கொண்டு வாசலுக்கு வந்தான். புகையிலையைக் குதப்பிக்கொண்டிருந்ததாலோ என்னவோ, அவன் அவளைப் பார்த்தும் ஒன்றும் பேசவில்லை. பக்கத்து வேலியின் கால்களாக இருக்கும் காட்டாமணக்குச் செடிகள் காற்றில் பயங்கரமாக அசைந்தாடிக்கொண்டிருந்ததைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தான். அவளுக்கு நாழியாகிவிட்டது. போகவேண்டியதுதான் என்று தோன்றினலும், அவனேடு ஒரு வார்த்தை கூடப் பேசாமல் போக மனசும் இடம் தரவில்லை. கணவன் பேசாவிட்டாலும் தான் பேசி அவனைப் பேசவைக்கவேண்டுமென்ற பெண்களுக்கே இயற்கையான குணம் இவளுக்கு மட்டும் இருக்காதா? ஏழை, பணக்காரி என்ற பாகுபாடு உலகத்தில் நிலவலாம். ஆனல் குணத்தில் எந்தத் தாரதம்யமும் காணமுடியவில்லையே! அவள் கொஞ்சுவது போல, "வேடிக்கையாகப் பேசினலும் ஒங்களுக்குக் கோபம் வந்துடும். ஹூம்...ஒங்க கிட்டே பளகிறது எப்படீன்னுதான் புரியல்லே" என்ருள். அவனுக்கு அனுதாபமாக இருந்தது. "போகட்டும், கூத்துக்குப் போவணும்னு பறந்தியே. போயிட்டு வா" என்ருன்.

கொஞ்சம் இடம் கிடைத்துவிட்டால் போதாதா பெண்களுக்கு? அவள் கூத்தைக்கூட மறந்துவிட்டாள். "இன்னிக்கு என்ன சம்பாதிச்சிங்க?" என்ருள் ஆவலோடு.

"ஒன்னரை ரூவா கூலி கிடைச்சுது. வளக்கம் போல அரை ரூவா செலவு பண்ணிட்டேன். பாக்கி ஒரு ரூவா இருக்கு; இந்தா" என்று அவளிடம் கொடுத்தான்.

அவள் அந்த ஒரு ரூபாயைக் கையில் வாங்கிக்கொண்டாள். வந்த கோபத்தை அடக்கமுடியவில்லே அவளால். "அரைரூவா செலவு பண்ணிட்டேன்னு சொல்றீங்களே, என்ன நெஞ்சழுத்தம் ஒங்களுக்கு. நானும் மூணுமாசமாக் கேட்டுக்கிட்டு வரேன், ஒரு சேலவாங்கிக் கொடுங்கன்னு. அதை வாங்கிக் கொடுக்க வக்கிருக்கா ஒங்களுக்கு. பக்கத்து வீட்டுச் சோமுவைப் பாருங்க. நேத்துக் காலயிலே தான் கேட்டாளாம் அஞ்சல. ஒரு சேலே வேணும்னு; நேத்து சாயந்திரமா வாங்கிட்டு வந்துட்டான். அவனும் ஒங்களைப்போலத்தானே சம்பாதிக்கிறான். நம்மைவிட ஒரு கொளந்தையக்கூடக் கட்டிக்கிட்டு மேய்க்க வேண்டியிருக்கு அவங்களுக்கு. அந்த மாதிரியில்லே குடும்பம் பண்ணணும். அது தான் போவுது. நீங்க அலுக்காமே எட்டணுவுக்குத் தின்னுட்டு வாரீங்களே; கொளந்தைகளுக்குத் திங்க எதுனுச்சும் வாங்கிட்டு வரக்கூடாது?" என்று வார்த்தைகளைக் கொட்டினாள்.

அவனுக்குக் கோபம் பிறிட்டுக்கொண்டு வந்துவிட்டது. எழுந்து அவள் கன்னத்தில்



'பளார்'என்று ஒரு அறை வைத்தான். "ஒனக்கு இன்னிக்கு என்னவோ நாசகாலந்தான் புடிச்சிருக்கு புள்ளே. இல்லாட்டி இப்படி யெல்லாம் மருவாதை கெட்டுப் பேசமாட்டே நீ. சேலேயில்லே வேணுமாம், சேலே. அடுத்த வீட்டு அஞ்சல ஒரு சேலே வாங்கிட்டா நீயும் வாங்கிடணுமாக்கும். மலபாரி டீஸ்டாலேக் கண்டால் காசுக்கு எங்கே செலவு வந்துடுமோன்னு மைல்தூரம் ஓடற அவன்மாதிரி கஞ்சத்தனமா நம்மாலே இருக்க முடியாது, தெரிஞ்சுக்க. அப்படி சேத்து வைச்சுத்தான் என்னத்தைக் காணப்போவுது? கொளந்தைகளாம், கொளந்தைங்க வெறும்பானையங்க. இதுங்களுக்குத் திங்க வாங்கிட்டு வாதுன்னு நாலுநாள் கூலி யிருந்தாலும் போறுதே" என்று அவன் சீறி விழுந்தான்.

அவளுக்கு அழுகை வந்து விட்டது. தன்னைத் திட்டிய தைக்கூட அவள் நினைக்கவில்லை. குழந்தைகளை அவன் கரித்துக் கொட்டியது அவளை என்னவோ செய்தது. "எதுக்கு அதுங் களைக் கண்டாக் காணவிடமாட் டேங்கிறீங்க. பாவம்! வெறும் புளுங்கரிசிச் சோத்தையும் உப் பையும் வறட்டு மிளகாய் வத் தலையும் தவிர அதுங்களுக்குத் திங்கன்னு நாம என்ன வாங்கிக் கொடுத்திருக்கோம்? எப்பவாச் சும் தேர் திருநாளுன்னுவெள்ளை முறுக்கு, இடியாப்பம், கடலை உருண்டை எதாவது வாங்கிக் கொடுத்திருப்போம். தீவளிக்கு வாங்கித்தந்த ஒரு சாயவேட் டியை வெச்சுக்கிட்டு அது க வருசம் பூராவும் காலந்தள்ளுது, வீணு அதுங்களைத் திட்டாதீங்க, அதுங்க நல்லகாலம் கூத்துப் பாக்கப் போயிடுச்சுங்க. ஒங்க முன்னுலே இப்ப நின்னுகிட் டிருந்தா நிச்சயம்யார்மேலேயோ இருக்கிற கோவத்தை அதுங்க கன்னத்திலே பதியவச்சிடு வீங்க... அப்ப சரி, நான் கூத்துப் பாக்கப் போயிட்டு வரட்டுமா?" என்றுள் அவள் நாத் தழுதழுக்க.

அவன் பதில் ஒன்றும் பேச வில்லை. அவள் கண்களி லிருந்து தளும்பிய கண்ணீரைச் சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு அவ்விடம் விட்டு நகர்ந்தாள்.

அவனுக்கு ஒன்றுமே ஓட வில்லை. மனம் குழம்பிக் கொண்டிருந்தது. பிறந்தால் பணக்காரக் குடும்பத்தில் பிறக்கவேண்டும். இப்படிப் பரம்பரை ஆண்டியாகப் பிறப்ப தற்குப் பிறக்காமலேயே இருக்க லாம். இந்த லட்சணத்தில் கல் யாணம் வேறு. அதுதான் போதாதென்று கால்டஜன் குழந்தைகள்! அவனுக்கு இதை யெல்லாம் நினைத்துப் பார்க்கவும் மனதை என்னவோ செய்தது.

அவன் ரொப்பவும் தங்கமான வன்தான். திருட்டு, புரட்டு என்ற பேச்சே அவனுக்குப் பிடிக்காது. நல்ல தேகக் கட் டுடன் இருந்ததால் உழைத்துத் தான் சாப்பிடவேண்டுமென்ற தீவிரமான நோக்கம் கொண் டிருந்தான். அதற்கேற்றாற் போலவே வேலை செய்துதான் வயிறு வளர்த்தாகவேண்டும் என்று அவன் தலையிலும் எழுதி யிருந்தது!

நான்கு ஆண்டுகளுக்கு முன் தான் அவனுக்குக் கல்யாண மாயிற்று. வெகு நாட்கள்வரை கல்யாணம் செய்துகொள்வ தில்லை என்றுதான் இருந்தான். ஆனல், அனுதையான அவ னுக்கு உடம்பு அசௌகரியம் ஏற்படும்போது கஞ்சி வைத்துக் கொடுக்கக்கூட யாருமில்லாமல் போகவே, கல்யாணம் செய்து கொள்வதுதான் சரி என்று பட்டது.

செங்கமலம் அவனுக்குக் கிடைத்ததை அதிருஷ்டம் என்றுதான் சொல்லவேண்டும். குணம், அழகு இரண்டிலும் அவளுக்கு ஈடு சோடு இல்லை. அதோடு, அவன் சம்பாதிக்கும் சொற்ப சம்பளத்தை வைத்துக்

கொண்டு கௌரவமாய்க் குடும்பம் நடத்தவும் அவளுக்குத் தெரிந்திருந்தது.

ஆனால் அவன் கொஞ்சம் ஊதாரிதான். வேலை செய்து விட்டு வரும்போது, ஒரு ஆறணுவுக்குக் குறையாமல் அந்த மலபார் டீ ஸ்டாலில் தின்றுவிட்டு வராவிட்டால் அவனுக்குப் பைத்தியம் பிடித்தாற்போல இருக்கும். அந்த ஆறணு வீட்டுக்கு எவ்வளவு உபயோகப்படும் என்பதை அவன் யோசித்துப் பார்ப்பதேயில்லை.

காலக்கிரமத்தில் எல்லோரையும்போல அவர்களுக்கும் குழந்தைகள் வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. அதற்கேற்ப ஒன்றின் பின் ஒன்ருக மூன்று குழந்தைகள் பிறந்தன. குழந்தைகளிடம் அவர்கள் உயிரையே வைத்திருந்தார்கள்.

அவனுடைய குழந்தைகள் மூன்றும் சமர்த்துத்தான். குழந்தைகளுக்கே இயற்கையான விஷமம் அவர்களிடமும் உண்டு என்ருலும், அதிகமாகப் படுத்துகிற குழந்தைகளோடு சேர்ப்பதற்கில்லை. ரேடியோ அலறும் அந்தப் பெரிய கட்டிடத்துக்கு அழைத்துப்போய் ஹல்வாவும் ஜிலேபியும் வாங்கித் தந்தால் தான் ஆயிற்று என்று அவை கூத்தடிப்பதில்லை. சாலையோரமாயுள்ள அங்காடிக் கூடைக்காரியிடமிருந்து வேகவைத்த சர்க்கரை வள்ளிக்கிழங்கோ, வறுத்த மணிலாக்கொட்டையோ வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தால் போதும்; வாயெல்லாம் பல்லாகி விடும்.

நாளடைவில் அகவிலை ஏறத் தால் அவன் சராசரி வருவாயான ஒன்றரைரூபாய் அவனுக்குப் போதவில்லை. மலபார் டீக்கடைக்கு முன்னை விட அவன் தினம் இரண்டணு அதிகம் கொடுக்க வேண்டி வந்துவிட்டது. தீபாவளியின்போது நூறு ரூபாய்ச் சீட்டு ஒன்று ஏலமெடுத்திருந்தான். அதற்கு மாதம் ஐந்து ரூபாய் கட்ட உண்டியில் தினம் மூன்றணுப் போடவேண்டியிருந்தது. பாக்கியிருக்கும் பதின்மூன்றணு அவன் குடும்பச் செலவுக்குப் பற்றவில்லை. சென்ற மூன்று மாதமாகச் சேலை வேண்டுமென்று அவள் நச்சரித்துக்கொண்டிருந்தும் இந்தத் தொல்லையினுல்தான் அவனுல் வாங்கிக்கொடுக்க முடியவில்லை.

அவன் என்ன பண்ணுவது என்று யோசித்துப் பார்த்தான்.

> புகழ் இல்லாமல் இலக்கிய கர்த்தா உயிர் வாழமுடியாது முகஸ்துதி வேண்டாம். இல்லாததை நீங்கள் சொல்லி விட வேண்டாம். 'செய்வது சரிதான்; நன்ருயிருக்கிறது' என்று சொல்லவாவது வேண்டாமா? நேர்மையான புகழ் இலக்கிய கர்த்தாவிற்கு ஊக்கமளிக்கும் உணவு. இதைக் கொடுக்கக்கூடிய சக்தியற்ற கோழையான ஒரு சமுகத்திற்கு என்ன எழுதிக் கொட்டவேண்டியிருக்கிறது!
>
> —புதுமைப்பித்தன்

'இப்படிப்பட்ட வாழ்க்கை ஒரு வாழ்க்கையா? தினம் பொழுது விடிந்தால் சேலே, ரவிக்கை, குழந்தைகளுக்குச் சொக்காய் என்ற பிடுங்கல்தானு? இங்கே என்ன கொட்டிக்கிடக்கிறதா கேட்கிறதை யெல்லாம் வாங்கிக் கொடுப்போம் என்பதற்கு? நாள் தவருமல் கூலிகிடைக்க வேண்டுமே என்பதற்காக வேலே தேடி அலேயவேண்டி யிருக்கிறது. இந்த நிலேமையில் ஒரு நாள் காய்ச்சல் என்று படுத்து விட்டாலும் போதும். வீட்டில் அடுப்புப் புகையாது.'—அவன் அலுத்துக்கொண்டான். வாழ்க்கையின்மேல் சொம்பநாட்களாகவே இருந்து வரும் வெறுப்பு வேறு. இப்படி அல்லல் பட்டுக்கொண்டு குடும்பம் நடத்துவதைவிட எங்காவது தூக்குப் போட்டுக்கொண்டோ, ஆற்றில் குளத்தில் விழுந்தோ சாவது மேல் என்று பட்டது. ஆனல், இந்த இரண்டிலும் தன் உயிர் நிச்சயம் போய்விடுமென்று அவனல் தீர்மானமாக எண்ணமுடியவில்லே. இந்தச் சமயத்தில் பக்கத்துத் தண்டவாளத்தின்மீது ஓடிய ரயிலின் சப்தம் பேரிரைச்சலாகவே அவன் காதில் விழவே, ரயிலின் முன் விழுந்து உயிரைவிட்டால் என்ன என்று பட்டது அவனுக்கு. அதுதான் சரியென்றும் தீர்மானித்துவிட்டான்.

அவன் எழுந்தான். மனேவியும், குழந்தைகளும் வழி மறிப்பதுபோல ஒரு பிரமை. எனினும், அவன் பின்வாங்கவில்லே. விடுவிடு என்று வீதியை அடைந்தான். நடந்து

வீதி எது, மரங்கள் எவை, வயல்கள் எவை என்று புரியாதபடி எங்கும் ஒரே மையிருட்டு. பேய்மாதிரி கரிய உருவத்துடன் அவன் நடந்துகொண்டிருந்தான். தூரத்திலே 'மினுக் மினுக்' கென்று ஒரு வெளிச்சம் ஊர்ந்து போய்க்கொண்டிருந்தது. வைக்கோல் வண்டிபோலிருக்கிறது. வண்டிக்காரன் ஆனந்தமாகத் தெம்மாங்கு பாடிக்கொண்டு மாட்டை இடையிடையே அதட்டிக்கொண்டிருந்தான். அவன் பாட்டுக்கு, மாசு போடாத அவ்வண்டி பின்னணி வாசித்தது. வண்டியின் 'லொடக் லொடக்' என்ற ஓசையையும், கடையாணியில் தொங்கவிடப்பட்டிருந்த தகரத் துண்டுகள் எழுப்பிய 'கலீர் கலீர்' என்ற சப்தமும் தாளம் போன்றிருந்தன. 'ஹூம். அவன் கொடுத்துவைத்தவன். கிராமத்திலிருந்து வைக்கோலே நகரத்துக்குக் கொண்டுபோய் விற்றுக் கொள்ளே லாபம் அடிக்கிறுன். அவன் பாட்டும் பாடலாம், அவனுக்குப் பஞ்சம் தெரியுமா? ஆட்டம் வேண்டுமானுலும் ஆடலாம்' என்று மனதுக்குள் முணுமுணுத்தவாறு பிரியும் அந்த மண் ரஸ்தாவில் நடந்தான்.

ரயில் தண்டவாளத்துக்குக் கூப்பிடு தூரத்தில் உள்ள அந்த வீட்டின் அருகே வந்தவன், அந்த வீட்டிலிருந்து ஏதோ அதட்டல் கேட்கவே, சட்

டென்று நின்றுவிட்டான். பஸ் கண்டக்டர் கருணாகரனின் வீடு அது. அவனும் மனைவியுடன் சண்டை போட்டுக்கொண்டிருக்கிறானா? சரி தான்! கல்யாணம் பண்ணிக்கொள்வதே புருஷனும் மனைவியும் சண்டை போடுவதற்காகத்தான் போலிருக்கிறது! அவன் மனதிற்குள் வறட்டுச் சிரிப்பு ஒன்று சிரித்துக்கொண்டான். உள்ளேயிருந்து வரும் சப்தம் மேலும் பலமாகக் கேட்கவே உன்னிப்பாய்க் கவனிக்க ஆரம்பித்தான்.

"ஆமாம், இங்கே பணம் என்ன கொல்லையிலே பயிராகுதுன்னு நெனைச்சிட்டிருக்கியா? மூக்குத்திதான் அடுத்த மாசத்தில் நிச்சயம் வாங்கித் தரேன்னு சொன்னேன். ஏன் வீணுக் கழுத்தை அறுக்கிறே? நான் என்ன பண்ணலாம்? வரூா சம்பளத்தைக் கொண்டுதானே எல்லாம் செஞ்சுக்கணும்? சம்பாரிக்கிற பணத்திலே நான் இது வரைக்கும் எதாச்சும் எனக்குன்னு வாங்கிக்கிட்டிருக்கேனு?" என்றான் கருணாகரன் கொஞ்சம் வேகத்தோடு.

காதைத் தீட்டிக்கொண்டிருந்த கந்தனுக்கு இதைக் கேட்கவும் ஒரே வியப்பாயிருந்தது. "பெண்களே இப்படித்தான் போலிருக்கிறது. இது வேண்டும், அதுவேண்டுமென்று எப்போதும் பிராணனை வாங்குகிறார்களே. இப்படி அப்படி என்று ஏதோ 'பேத்து மாத்து' பண்ணிப் பத்துக்காசு சம்பாதிக்கிறவன்வேண்டுமானால்இப்படிப் பட்ட பெண்களைச் சரியானபடி திருப்திப் படுத்தமுடியும். வேண்டிய மட்டும் உழைத்து, சொற்பக் கூலி பெறும் நம்மால் இதெல்லாம் சாத்தியமில்லை. இங்கே எட்டு ரூபாய் சேலை கேட்டால் அங்கே இருபது ரூபாய் மூக்குத் திருகு கேட்கிறாள். அவரவர்கள் நிலைமைக்குத் தகுந்தாற்போலே, கேட்கும் பொருளும் மாறுபடும்போலிருக்கிறது. மற்றபடி பிடுங்கல் எல்லாம் ஒன்றுதான்"—அவன் ஒரு வேதனைச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே மேலே கவனமாய்க் கேட்கலானான்.

"அதெல்லாம் சரி, தினம் முக்கால் ரூபாபோல ஓட்டல்லே செலவு பண்ணிடறீங்க. அதைக் கொஞ்சம் குறைச்சுக்கிட்டா அந்தப் பணம் எத்தனையோ காரியத்துக்கு உபயோகப்படுமில்லே" என்றாள் கருணாகரனின் மனைவி.

"ஆகட்டும், பார்ப்போம்" என்று அசட்டையாகப் பதிலளித்தான் கருணாகரன்.

"அது போகட்டும், அடுத்த மாசமாவது மூக்குத்தி வாங்கிப் போடுவீங்களா......?" அவள் திரும்பவும் அதே பல்லவியைப் பாட ஆரம்பித்தாள்.

அவனுக்கு மூக்குக்கு மேல் கோபம் வந்துவிட்டது. "இப்ப நீ என்னை என்ன பண்ணச் சொல்றே? நீ சொல்றதைப் பார்த்தா நான் எங்கேயாச்சும் கொள்ளையடிக்க வேண்டியது தான்னு தோணுது. இரண்டு மாசம் ஆகட்டும்னு சொல்றேன்.

திருப்பித் திருப்பி நீ சொல்லிக் கிட்டு இருக்கிறதையே சொல் லிக்கிட்டு இருக்கியே. இங்கே பாரு. நான் படிச்ச படிப்புக்கு இதுக்கு மேலே சம்பாதிக்க முடியாது. இதை வெச்சிக் கிட்டுத்தான் குடித்தனம் பண் ணியாகணும். சில கோழைப் பசங்க போல, கஷ்டமா இருக் கேன்னு தற்கொலை பண்ணிக்கச் சொல்றையா?" என்றான் அவன் கண்டிப்பாக.

அவளுக்குத் 'தற்கொலை' என்றதும் 'பகிர்' என்றதோ என்னவோ? "சரி, சரி, போதும். அசட்டுப் பிசட்டுன்னு பேசா தீங்க" என்றாள் அலுத்துக் கொண்டு.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த கந்தனுக்குச் 'சொரேல்' என்றது. "என்ன, நம்மைப்போல் இரண்டு மடங்கு சம்பாதிக்கும் கருணாகரனும் சிர மம்தான் படுகிறான். வீட்டுக்கு வீடு வாசற்படிதான்போலிருக் கிறது. நாம் சிரமப்படுவதொன் றும் பெரிய ஆச்சரியமில்லேயே. கிடைத்ததைக் கொண்டு குடித் தனம் நடத்தவேண்டியதுதான் என்கிறானே கருணாகரன். என்ன நியாயமான பேச்சு. ஹோட்டல் செலவைக் குறைத்துக்கொண் டால் ஓரளவு மிச்சப்படுத்தலாம் என்று அவன் மனைவி சொல் வதும் மெய்தான். ஆமாம், இவள் என்ன புதிதாகச் சொல்லி விட்டாள்? என் செங்கமலமும் அதைத்தானே வாய்க்கு வாய் சொல்லுகிறாள். ஆஹா, அவள் எவ்வளவு நல்லவள்! அவளையும் குழந்தைகளையும் தவிக்கவிட்டுத் தற்கொலை செய்துகொள்ள இங்கு வந்ததே, அவங்களுக்குப் பெரும் துரோகம் செய்த தாகுமே—" அவன் மனதில் இந்த எண்ணங்கள் எழும்பிக் குதித்தன. அவ்வளவுதான்! அவன் வந்த பாதையை நோக்கித் திரும்பினான்.

இரண்டு மூன்று பர்லாங்குக்கு அப்பால் வந்துகொண்டிருந்த ரயிலின் 'சர்ச்லைட்' வெளிச்சம் அவன் முகத்தில் விழுந்து அங்கே இவ்வளவு நேரமாகப் படர்ந்திருந்த இருளை அகற்றி யது. எங்கே ரயில் தன்னை அரைத்துவிடுமோ என்ற அசட்டுப் பயம் அவன் மனத் திலே தோன்றியதோ என் னவோ, அவன் வேகமாய் வீட்டை நோக்கி நடந்தான். எதிர்த்தாற் போல் வந்துகொண்டிருந்த வண் டிக்காரன் ஒருவன் பாடிய பாட்டு அவன் மனதுக்கு ரொம் பவும் ஆறுதலாயிருந்தது. அதன் கருத்தும் அவனுக்கு சரியென்று பட்டது. சற்று முன்பு கூட்டத் தில் பாடிய பாடிய பாட்டுத்தான் என்றாலும், சுலபமாயிருந்ததால் அவனும் ஒருமுறை வாய்விட்டுப் பாடினான்.

"படிக்காதவன்தான் அழுவறான்னு
படிச்சவனுமில்லே அழுவறான்;
இல்லாதவன்தான் தவிக்கிறான்னு
இருக்கிறவனுமில்லே தவிக்கிறான்;
இந்த நிலைக்கு விடிவுகாலம்
இப்போதைக்கு இல்லையா?"

53 Persons are awarded prizes in our puzzle No. 9 (1st prize 20, 2nd prize 1, 3rd prize 26 and 5th prize 6 persons)

Full particulars are published in the Rainbow dated *25-5-52*

ரிஜிஸ்டர் நெ. 277 — **ரூ. 25,000 பரிசு** — போட்டி நெ. 11

MS Premier Bank of India Ltd-ல் *சீல்* செய்துவைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர் களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்ரும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியானவிடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000 முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு *5*-ம் பரிசு ரூ. 1000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும். மேற்கண்ட பரிசுகள் எங்கள் கம்பெனியின் நிபந்தனைப்படி வசூலுக்கு தகுந்தபடி பகிர்ந்து கொடுக்கப்படும்.

AMBAL'S PUZZLES

KEY S. NO 9 23 ...

38	24	25	35
27	33	32	30
31	29	28	34
26	36	37	23

We hereby certify that the above is the solution in original deposited with us by *Ambal's Puzzles No* 9 on 15/4/52 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd.

V. Ramanathan 19/5/52

Agt. Madras.

முடிவு தேதி 12-6-52 **விடை 27-6-52**

பிரவேசக் கட்டணம் : கூபன் *1*-க்கு ரூ. *1-0-0* 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5-0-0

154

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 31 முதல் 46 வரையுள்ள எண் களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இட மிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினலும் 154 வரும்படி யாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோ கிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், என்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதைக் கூபன்களு டன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவது மாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும், அல்லது 4 அணு ஸ்டாம்பு அனுப்பினுல் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

AMBAL PUZZLE NO 11

28 (14) Thandavaraya Gramani Street, Tondiarpet, MADRAS - 21

பெண்கள் முன்னேற்றம்

சுலோசனா

சாசு எதிர்பார்த்துக்கொண்டிருந்த ஞாயிற்றுக்கிழமை விரைவில் வந்துவிட்டது. அவளுக்கு ஒரே குதூகலம். ஏதோ ஒரு புதுஉலகில் திடீரென்று பிரவேசிக்கச் செல்வதுபோன்ற உணர்ச்சி அவளை உற்சாகப்படுத்திக்கொண்டிருந்தது. குழந்தைகள் விளையாடச் சென்றுவிட்டனர். அவளது கணவர் அறையில் அமர்ந்து சாவகாசமாகப் படித்துக்கொண்டிருந்தார்.

மூன்று மணிக்கே கண்ணாடியின்முன் வந்து நின்றுகொண்டாள் சாசு. பலரகப்பட்ட பெண்களுக்கு முன்னே முதன்முதலில் தான் காட்சியளிக்கப் போவதை நினைக்க நினைக்க அவளுக்கு எப்படியோ இருந்தது. கொஞ்சம் பயமும்கூட! பெண்கள் சங்கமல்லவா? தனது புடவையைப் பார்த்தோ, மற்றும் அலங்காரத்தைப் பார்த்தோ அவர்கள் கேலிசெய்துவிட்டால்?

ஒழுங்காகத் தலைவாரி முடித்துப் பொட்டிட்ட சாசு, சிறிது பௌடரையும் தடவிக்கொண்டாள். பெட்டிக்குள்ளிருந்த புடவைகளில் எதைத் தேர்ந்தெடுப்பது என்பது பெரிய பிரச்சனையாகவேயிருந்தது. முடிவில் என்னதான் தோன்றியதோ, அவளது அன்னை அவளுக்கு அளித்திருந்த பழங்காலத்து நார்ப்பட்டுப் புடவையை எடுத்து அழகாக உடுத்திக்கொண்டாள். பளிச்சிடும் சிவப்பு நிறம்; அதற்கிசைந்தவாறு ஒரு ரவிக்கையையும் போட்டுக்கொண்டாள். பின்னர், கண்ணாடியில் தன் உருவைக் கவனித்தாள். ஒரு புதிய பெண்ணை அங்கே காண்பது போன்றிருந்து அவளுக்கு. உடல் சிலிர்க்கவே, புன்னகை புரிந்துகொண்டாள்.

“டிரஸ் பலமாக இருக்கிறதே?” என்று கூறிக்கொண்டே உள்ளே வந்தார் அவள் கணவர். சாசுவின் முகம் அழகாகச் சிவந்தது. “பெண்கள் சங்கமல்லவா? கவனமாக இருக்காவிட்டால் மானம் போய்விடும்! இது வெள்ளை, அது சொள்ளை என்று கேலிக்கிடமாகிவிட்டால் என்ன செய்வது? உலைவாயை மூடினாலும் ஊர்ப் பெண்கள் வாயை மூட முடியுமா?” என்றாள் அவள்.

“சரிதான் போ; இனி நமக்கும் வீட்டில் நிம்மதியிருக்காது என்று சொல். அது சரி; நீ உடுத்தியிருப்பது பழங்காலப் புடவையாயிற்றே; இதைப் பார்த்துக் கிண்டல் செய்யமாட்டார்களா உன் சிநேகிதைகள்?”

"மாட்டார்கள்; பழங்காலப் பாஷன் தான் இப்போது திரும்பியிருக்கிறதே"

"பெண்கள் நாகரிகம் சுழன்று..." மேலே கூறமுடியாமல், வெளியே பார்வதியின் குரல் அவரைத் தடைசெய்தது. சாசுவின் முகம் மலர்ந்தது. "பார்வதி வந்துவிட்டாள்! நான் போய்வருகிறேன்!" என்று குதூகலத்துடன் மொழிந்தவள் அறையைவிட்டு விரைந்தாள். அவள் சென்ற திக்கையே நோக்கியபடி நின்றார் அவளது கணவர்!

2

அழகாகக் கட்டப்பட்டிருந்த ஒரு சிறு பங்களாவே ரமாவின் சங்கம். பெரியபலகணிகளினூடே சுகமான தென்றல் பிரவேசித்துப் பரவசப்படுத்திக்கொண்டிருந்தது. நடுவிலிருந்த பெரிய ஹாலில் சுமார் இருபத்தைந்து பெண்கள் அமர்ந்து படித்துக்கொண்டே, பற்பல கைவேலை செய்துகொண்டிருந்தனர். ரமா சாசுவை அழைத்துச் சென்று ஒவ்வோர் பெண்ணுக அறிமுகம் செய்து வைத்தாள். ஒரு ஓரமாக அமர்ந்து கைக்குட்டை ஒன்றில் பூவேலை செய்துகொண்டிருந்த நங்கை ஒருத்தி சாசுவின் கவனத்தைக் கவர்ந்தாள்.

"மாஜிஸ்டிரேட்டின் புதல்வி கமலி!" என்று அறிமுகம் செய்து வைத்தாள் ரமா. சாசுவை "உட்காருங்களேன்!" என்றுள். சாசு உட்கார்ந்தாள். கமலியின் அருகிலிருந்த சிறு தையல் பெட்டியைமெல்லத் தன்னருகில் நகர்த்தியவள் அதைத் திறந்து, பார்த்தாள். கமலி புன்னகை புரிந்தாள். "பரிகாசம் செய்ய மாட்டீர்களென்று நினைக்கிறேன்!" என்று கூறியவள் தன் கையிலிருந்த தையலைக் கீழே வைத்துவிட்டுச் சாசுவைப் பார்த்தாள்.

> காருண்யம் என்பது செவிடர்கள் கேட்கக்கூடியதும், குருடர்கள் படிக்கக் கூடியதுமான ஒரு சொல் அடுக்கு.
>
> விக்டர் ஹ்யூகோ

"பரிகாசமா? எதற்காக?" என்றுள் சாசு ஆச்சரியத்துடன். பெட்டிக்குள்ளே இரண்டுமூன்று சிறு சட்டைகள் காணப்பட்டன. பழங்காலப் புடவைகள் சிலவற்றிலிருந்து கத்தரித்தெடுக்கப்பட்ட பலதினுசுத் துண்டுத் துணிகளால் இணைக்கப்பட்ட சட்டைகள் அவை. உறுதியாகவும் அழகாகவுமிருந்தன. பழங்காலத்துத் துணிகள் உறுதியானவை என்பதற்குச் சந்தேகமேயில்லை. "இதுவும் ஒரு பாஷனுகத்தானேயிருக்கிறது!" என்று கூறிய சாசு சட்டைகளை ஒவ்வொன்ருகக் கூர்ந்து நோக்கினுள்.

"பாஷன் என்பதற்காக மட்டுமல்ல. துணிகளை வீணுக்காமல்

இதுமாதிரிச் சட்டைகள் தைத்தால் நன்றாக உழைக்கும், உபயோகமாகவுமிருக்கும். புதுமாதிரி நாகரிக உடை போலவும் தோன்றுமல்லவா? இந்த நாகரிகம் சீக்கிரத்தில் பலவிடங்களிலும் பரவி, பிறகு பெண்கள் இதைப் போலவே தைக்க ஆரம்பித்துவிடமாட்டார்களா?" என்றாள் கமலி.

"பெண்களின் உடைநாகரிகம் கணத்திற்குக் கணம் மாறிக்கொண்டு வருவது விந்தையாகத்தான் இருக்கிறது! நேற்று ஒரு தினுசுச் சட்டை போட்டுக்கொண்டிருக்கிறவள், இன்று வேறொரு தினுசு போடுகிறாள். இந்த மாறுதல் எப்படி, என்ன விதமாக ஆரம்பிக்கிறதென்பது இன்னமும் மர்மமாகத் தானிருக்கிறது!"

"பழங்காலத்து நாகரிகம் மறுபடியும் திரும்பியிருக்கிறதல்லவா? என் மனதிற்கு அது மிகவும் திருப்தியையளிக்கிறது. நீ கட்டிக்கொண்டிருக்கும் புடவையும் பழங்காலத்தது தானே? இப்போது அதைப் பார்க்கையில் ஏதோ புதிய மாதிரி போல் கண்ணுக்குப் படுகிறது. நமது பாட்டிமார்களெல்லாம் உயிரோடிருந்து இதைக் கண்ணாரப் பார்த்திருந்தால் மகிழ்ச்சியால் பூரித்திருக்கமாட்டார்களா?"

"புடவை மட்டுமா மறுபடியும் திரும்பியிருக்கிறது? ரவிக்கையையும் பார்த்துக்கொள்ளுங்கள்! முன்னமே மணிக்கட்டுவரை சட்டை. பிறகு அது சிறிது சிறிதாகக் குறைந்து தோள் பட்டைக்கும் மேலேயே சென்றுவிட்டதல்லவா? எங்கே பெண்கள் இனி ஜாக்கட்டை அணியமாட்டார்களோ என்று நாம் பயந்துகொண்டிருக்கையில் திடீரென்று 'இறக்கை முளைத்த சட்டை' வந்து புகுந்தது. தோள் பட்டையில் சிறிது உயர்ந்து, சுருக்கம் வைத்துப் பிடிக்கப்பட்டிருந்த அந்தச் சட்டை முதன் முதலில் நம் பெண்களுக்கு அழகாகவும் நாகரிகமாகவும்தான் தோன்றியது!

"அழகைத்தானா பெண்கள் விரும்புகின்றனர்? இக்காலத்தில் நாகரிகத்தையல்லவா! பண்டைக் கால ரவிக்கை இப்போது நாகரிகம்!"

"எல்லாப் பெண்களுக்கும் ரவிக்கை பொருத்தமாக இருப்பதில்லை. ரொம்பவும் பருமனாகவும், ஒல்லியாகவுமின்றி நடுத்தரமான பெண்களுக்கே ரவிக்கை மிகவும் பொருத்தம். தடித்தவர்களுக்குக் கொஞ்சமும் பொருத்தமில்லை. மேலும் மிகவும், இறுக்கமாகத் தைப்பதென்றால் அதைவிட ஆபாசம் வேறில்லை. மெலிந்தவர்கள் ரவிக்கை போட்டுக்கொண்டால் மேலும் மெலிவாகத் தோன்றுகிறார்கள், இல்லையா?"

(வளரும்)

காலணா

வேலைவில்லவன்

என்றும்போல ஒருநாள்!

அந்தி மயங்கிக்கொண்டிருந்தது. மின்சார விளக்குகள் மின்ன ஆரம்பித்துவிட்டன. நகரின் முதுகெலும்பாகக் கருதப்படும் அந்தப் பாதையில் பணம் மகுடியூதி நாகரிக நாகத்தைப் படமெடுத்தாடச் செய்துகொண்டிருந்தது. மனித மந்தைகள் நகர்ந்துகொண்டிருந்தன.

ஒரு பெரிய ஜவுளிக்கடை! அதன் முன்பு இரு பொம்மைகள்-உயிர்ப்பொம்மைகள்! ஒன்று பட்டாடை உடுத்திக்கொண்டு நின்றிருந்தது. மற்றொன்று கோவணத் துணியுடன் தன் விலா எலும்புகளையும் உப்பிய வயிற்றையும் காட்டி நின்றுகொண்டிருந்தது. ஒன்று அந்தக் கடையின் பெருமையையும் புகழையும் எடுத்துக் காட்டுவது; இன்னொன்று இந்த நாட்டின் நிலையை எடுத்தியம்புவது! ஆமாம், அந்தப் பிச்சைக்காரப் பையன் குரலெழுப்பச் சக்தியில்லாமல் பொம்மையைப்போல நின்றவாறு நெளியும் நாகரிகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்...

ஒரு பெரிய ஓட்டல்! பலகார விருந்தோடு இசை விருந்து அங்கு இணைந்து நின்றது. ரேடியோ, 'ஒருசாண் வயிறே இல்லாட்டா...' என்ற பாடலைப் பாடிக்கொண்டிருந்தது. 'ஒருசாண் வயிறு' மனிதர்களை அந்த ஓட்டலினுள் நுழைய வைத்துக்கொண்டிருந்தது. கிழட்டுப் பிச்சைக்காரன் முதல் குழந்தைப் பிச்சைக்காரன் வரை அனைவரையும் மானத்தை விட்டு எசல்களைச் சகித்துக்கொண்டு அந்த ஓட்டலின் வாயிலில் நின்றவாறு வேண்டுதல் குரலெழுப்பச் செய்துகொண்டிருந்தது. ஒரு புண்ணியவான் தரையிலே வீசியெறிந்துவிட்டுப் போன காலணா நாணயத்திற்காக இருபிச்சைக்காரச் சிறுவர்களைக் குஸ்திபோடச் செய்துகொண்டிருந்தது. தினமும் பார்த்துப் பார்த்துச் சலித்துப் போன அந்த ஓட்டலின் 'ஒரு முழத்தொந்தி' முதலாளி அன்று அந்தப் புளித்துப்போன காட்சியைச் சட்டைசெய்யாது 'கவுண்டரில்' உட்கார்ந்துகொண்டிருந்தார்...



'மனிதன் கெஞ்சுதலுக்கும் வேண்டுதலுக்கும் செவி சாய்ப்பதில்லை; மிரட்டலுக்கும் உருட்டலுக்கும் அவன் வணங்குவான்' என்ற உண்மையை அவர் நிரூபித்துக் காட்டினார். பிச்சைக்காரர்களின் குரலைச் சட்டை செய்யாத அவர், ஒரு மோட்டாரின் 'ஹாரன்' சத்தத்தைக் கேட்டதும் துடித்துக் குதித்துத் தம் மகளுடன் பாதை ஓரமாக ஒதுங்கிக்கொண்டார். மனிதரல்லவா!

அந்தப் பாதையிலே நகர்ந்து கொண்டிருந்த மனித மந்தைகளும், ஓடிக்கொண்டிருந்த மோட்டார் வாகனங்களும், குரலெழுப்பிக்கொண்டிருந்த ரேடியோக்களும், பிச்சைக்காரர்களும் சேர்ந்து அங்கு இரைச்சலைச் சுழித்து நிற்கச் செய்தனர்.

எதையும் சட்டை செய்யாமல், தம் ஐந்து வயது மகளின் கையை இறுகப் பிடித்துக் கொண்டு நகர்ந்தார் அந்த மனிதர். அந்த ஓட்டலை அவர்கள் நெருங்கியதும் அந்தக் குழந்தை அதைத் தன் தந்தைக்குச் சுட்டிக் காட்டித் தன் அரும்புப் பற்களைக் காட்டியது. அவரும் சிரித்துக் கொண்டே குழந்தையை அழைத்துக்கொண்டு ஓட்டலின் வாயிலை அடைந்தார்.

அந்தச் சிற்றுண்டிசாலையில் மகளுடன் சிற்றுண்டியருந்தி விட்டு வெளியே வந்தார். அவரை ஒரு பிச்சைக்காரக் கும்பல் முற்றுகையிட்டது.

விழிக்குழிகளுக்குள்ளே அழுந்திக் கிடக்கும் 'மாஜி கண்'களைக் காட்டி நிற்கும் குருடன்! கந்தலாடைக்கு அழுக்கு மெருகேற்றி அதை அணிந்து நிற்கும் சிறுமி அவன் மகள். அந்தக் குருடனின் வழிகாட்டி! விலா எலும்புகள் புடைக்கப் பானையைப் போலிருக்கும் வயிற்றையுங் காட்டும் பொடிப் பிச்சைக்காரர்கள்!...இத்தனை பேரும் சேர்ந்து "ஐயா சாமீ, தரும

துரைகளே உங்களுக்குப் புண்ணியமுண்டு!..." என்று குரலெழுப்பினார்கள். அம் மனிதர் தமது 'மனிதத்தன்மை'யை ஏழைகளுக்குக் காட்டினார். ஒரே அதட்டல்—அவ்வளவுதான் பிச்சைக்காரக் கும்பல் ஒதுங்கி நின்று அந்த மனிதருக்கு வழி விட்டது. அவர் நடந்தார்.

அந்தச் சிறுமி தன் குருட்டுத் தந்தையின் கரத்தைப் பிடித்திழுத்துக்கொண்டு அந்தப் பெரிய மனிதர் பின்னாலேயே ஓடினாள். "ஐயா! சாப்பிட்டு ரெண்டு நாளாகுது ஐயா! ஒரு காலணாக் கொடுங்கய்யா!" என்று பரிதாபகரமாகக் கெஞ்சினாள். பல முறை கேட்டுக்கொண்டே அவர் பின்னே ஓடினாள். "ஐயா ஒரு காலணா...ஒரு...காலணா... ஐயா...... காலணா!"...... அவர் கோபத்தோடு திரும்பிப்பார்த்து "ஏய் இப்பப்போறியா இல்லே உதை வாங்கிட்டுப் போறியா?" என்று இரைந்துவிட்டுத் தன் மகளின் கையை இறுகப் பிடித்துக் கொண்டு நடந்தார்.

அவரின் அழகு மகளிடமிருந்து கிளம்பிற்று.

"பத்மா, இப்ப உனக்கு என்னத்துக்குக் காலணா? நாளைக்குப் பள்ளிக்கூடத்திற்குப் போகிறபோதுதான் கொடுப்பேன்!" என்று அழுத்தமாகச் சொன்னார் அவர். அந்த அழுத்தத்தில் அன்பும் குமிழிவிடாமற் போகவில்லை. கேட்டது மகளல்லவா?...

"இல்லே. எனக்கு இப்பத்தான் வேணும்!" என்று தன் வாயைச் சுளித்துக் கேட்டது அந்த அழகு மெருகுப் பொம்மை. கண்ணீரைக் காட்டி அவரைப் பயமுறுத்தியது. பல முறை சொல்லிப் பார்த்தும் அக் குழந்தையின் பிடிவாதத்தை அவரால் அடக்க முடியாமற் போய் விட்டது. பர்ஸிலிருந்து ஒருகாலணா நாணயத்தை எடுத்து அதனிடம் கொடுத்துவிட்டார்.



தன் தந்தையின் கையை இறுகப் பிடித்துக்கொண்டு அவனுக்கு வழி காட்டியபடி வந்த வழியே நடந்தாள் அந்த சிறுமி. "அப்பா, எனக்குக் காலணாப்பா!" இந்தப் பல்லவி



ஆசிரியர்: இந்தக் கவிதையை நீங்களேதான் எழுதினீர்களா ?

எழுத்தாளர்: ஆம்; ஒவ்வொரு வரியையும் நானேதான் எழுதினேன்.

ஆசிரியர்: அப்படியென்ருல் மிகவும் மகிழ்ச்சி. பாரதியாரே, நீங்கள் நீண்ட நாட்களுக்கு முன்பே இறந்துவிட்டதாக அல்லவா இருந்தேன்!

அது அக்காலணுவைத் தன் உள்ளங்கையிலே அடக்கி வைத்துக்கொண்டது. இருவரும் நடந்தார்கள்!

★

என்றும்போல ஒருநாள்!

மாலைநேரம். அதே பாதை, அதே ஒட்டலின் முன்பு இரு மனிதர்கள் பேசிக்கொண்டார்கள்:

"என்ன சார், ஆள் அடையாளமே தெரியலையே! இளைச்சுப் போயிட்டீங்களே! என்ன சார் இது? தாடியும் மீசையுமா!"

"எல்லாம் விதி சார்...விதி!"

"எனக்கு ஒன்றும் விளங்கலையே, சார்."

"சார்...என் ஒரே மகள்... பத்மா..."

"என்ன சார் அவளுக்கு?"

"அவள் இறந்துவிட்டாள்."

"த்ஸ்...த்ஸ்...எனக்குத்தெரியவேதெரியாதே. எப்படி சார்?"

"டைபாயிட்!"

"டைபாயிடா?"

"ஆமாம் சார்...எல்லாம் என் குற்றம்! அவள் கேட்டபோதெல்லாம் காலணு, காலணுவாகக்கொடுத்தேனே, அது என் குற்றம்தான்...பாவம், குழந்தை வீதியிலே விற்கிற கண்ட கண்ட பண்டங்களை வாங்கித் தின்று அந்த வியாதியைத் தேடிக் கொண்டு என்னை விட்டுவிட்டுப் போயிட்டாளே, சார்!"

"வருத்தப்படாதீங்க சார். இனிமே அழுது என்ன பயன்? வாங்கோ, காப்பி சாப்பிடுவோம்!"

அந்த ஒட்டலின் வாயிலிலே ஒரு ஓரத்தில் உட்கார்ந்திருந்த ரோகிப் பிச்சைக்காரனும் குருட்டுப் பிச்சைக்காரனும் பேசிக்கொண்டார்கள்:

"அழாதே அண்ணே...என்ன செய்யறது? அந்த ஆண்டவனுக்கே கண்ணில்லாதபோது..."

"இந்தப் பாழும் மனிதர்களுக்குக் கண்ணிருந்து, தினமும் அவளுக்கு ஒரு காலணு கிடைச்சிருந்தா அவள் செத்திருப்பாளா? ஐயோ..."

பாழும் காலணு இரு குழந்தைகளை இருவேறு விதங்களில் கொலைசெய்துவிட்டது!



'குருகும்ம்ம!...டுடுடும்ம்ம்!...' வெண்ணிலப் புகை மூச்சுப் பீச்சியடிக்க, செந்தீ எச்சிலைக் காறி உமிழ்ந்து, வெகு பயங்கரமாய் உறுமிக்கொண்டே இருந்தன பேய்வாய்ப் பீரங்கிகள்!

பயங்கரப பீரங்கிகளின் குரூரமான இடைவிடாத தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் பீரங்கிக் குழிகளுக்கு இலக்கான எட்டுநாட்களில் கட்டி முடித்த அதோ!... அந்தக் கோட்டை இடிந்து, தகர்ந்து, நொறுங்கி விழுந்து நாசமாயிற்று!

"...ஆ! ஐயோ! அம்மா!..." கோட்டைக்குள் அடைக்கலம் புகுந்திருந்த தாய்மார்களும் குழந்தைகளும் முதியவர்களும் இடிந்து வீழ்ந்த கோட்டை கொத்தளங்களின் சுவர்களின் இடுக்கில் அகப்பட்டு, எலும்பு நொறுங்கி, மண்டை பிளந்து மாண ஓலமிட்டனர்; துடித்தனர்; மாண்டனர் ஒரே நாசம!

அதோ, அங்கே பாருங்கள்! இடிந்து சாய்ந்து கிடக்கும் மாபெரும் சுவரின் கீழிருந்து வெளிநீட்டித் துடிதுடிக்கும் அந்தக் கையும் சுவரின் கீழிருந்து எழும்பும் "ஆ! கண்மணி! கண்மணி!..." என்ற உயிர்க்கூச்சலும் நம இருதயத்தைக் கிழிக்கிறதே!

அந்தக் கை யாருடையது? அங்கிருந்து எழும்பும அந்தக் "கணமணி! கணமணி!" என்ற மாண ஓலம் யாரை அழைக்கிறது?

சொல்கிறேன்: சொல்லப் போவதுதான் கதை!

பாரதநாட்டில் முதன் முதலாக, சுதந்திர வெறிபிடித்து வீர முழக்கம் செய்தவன் செஞ்சி நாட்டு இளவரசன் ராஜா தேசிங்கு. இரண்டாவது முழக்கம் செய்தவன் பாஞ்சாலங்குறிச்சியை ஆண்ட வீர பாண்டிய கட்டபொம்மு.

சிப்பு, சோப்பு, கண்ணாடி விற்க வந்து, துப்பாக்கியைக் காட்டி எப்பக்கமும் கொடி நாட்டிவிட நினைத்த வெள்ளைக்காரர்களை—அடிமைப்படுத்தி வரிப்பணம் வாங்கிக் கொழுக்க வந்த கும்பினிப்படைகளை, வீர பாண்டிய கட்டபொம்மு ஆவேசத்துடன் எதிர்த்தான்! 'மழை பொழியுது, மண் விளையுது, மக்களின் காணிக்குக் கிஸ்தி ஏது?' என்று சுதந்திர முழக்கமிட்டு தன்மான வெறிபிடித்துத் தாக்கினான்!

கடைசியில்...?

1760-ம் வருஷம், ஜனவரி மாதம், 5-ந்தேதி, இம் மண்ணுலகில் பிறந்து, 1790-ம் வருஷம், பிப்ரவரி மாதம் 2-ந்தேதி பாஞ்சாலங்குறிச்சிக்கு மன்னனாகி, 1799-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் குள்ளநரிக் குணம் படைத்த கும்பினியார்களை எதிர்த்து, அதே வருஷம், அக்டோபர் மாதம் 16-ந்தேதி கயத்தாற்றிலே, புளியமரத்திலே, படுபாவிப் பரங்கியர்களால் தூக்கி விடப்பட்டு வீர மரணமடைந்தான் கட்டபொம்மு!

அதன் பின்—

கட்டபொம்முவின் உயிர்த் தம்பி ஊமைத்துரை, ஊதாரி வெள்ளையர்களை உக்கிரமாக எதிர்க்க ஆரம்பித்தான்; கும்பினிப் படைகளின் குடல்களைப் பிடுங்கினான். இரக்கமற்ற இதயங்களைப் பிளந்தான்.

பாஞ்சாலங்குறிச்சியிலே பயங்கரப்போர்! எங்கும் போர்! குரூரமான சுதந்திரப்போர்!

அப்போது ஒரு நாள்...

கும்பினிக் குரங்குகளால் குப்பை மேடாக்கப்பட்ட பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை இடித்து நொறுக்கி நாசமாகிக் கிடந்த கோட்டையை—எட்டே நாளில் வெகு விரைவிலே, மிக உன்னதமாய்க் கட்டி முடித்து விட்டு, ஏகாதிபத்திய வெறி பிடித்த வெள்ளையர்களை வெட்டி வெட்டிக் கூறுபோடத் திட்டமிட்டுக் கொண்டிருந்தான் வீர சிங்கம் ஊமைத்துரை. கோட்டையின் தென்திசைத் தளத்தின் மீது தன்னந் தனியாக அப்படியும் இப்படியும் உலாவியபடி ஏதேதோ எண்ணமிட்டுக் கொண்டிருந்தான்.

"மாமா!"—கண்மணியை நினைவூட்டும் இந்தக் குரலைக் கேட்டதும், ஊமைத்துரை சட்டென்று திரும்பிப் பார்த்தான். அருகில் கண்மணியே உருவாக நின்று கொண்டிருந்தாள், பன்னிரண்டு வயதுத் தங்கை. அந்த இடத்தில் அந்தத் தங்கையைத் தனியாகக் கண்டதும், ஊமைத்துரையின் உள்ளம் ஒருதுள்ளுத் துள்ளியது.

"கண்மணி!..."—உயிர் குலுங்கக் கத்திக்கொண்டே பாய்ந்தோடிச் சென்று கண்மணி

என்ற அழகுப் பெயருக்குச் சொந்தக்காரியான அந்தத் தங்கையை அப்படியே வாரி யெடுத்து நெஞ்சோடு அணைத்துக்கொண்டான் ஊமைத்துரை.

இருவர் கண்களிலும் கண்ணீர் ததும்பியது.

ஓரிரண்டு விநாடிகள் அமைதியைச் சுமந்துகொண்டு ஓடி மறைந்தபின்—

"கண்மணி, இந்தச் சமயத்தில் இங்கே எதற்காக வந்தாய்?" என்று நெஞ்சு விம்ம, கண் கலங்க ஆதுரத்துடன் கேட்டான் ஊமைத்துரை—வாயால் அல்ல! கைச்சாடையால்!

கண்மணி கணநேரம் மௌனமாயிருந்தாள். அதன் பின், "நானும் சண்டைக்கு வருகிறேன். என் அத்தானைக் கொன்ற அந்தத் தறுதலைகளின் தலைகளை நசுக்க வருகிறேன்!" என்று வீராவேசத்துடன் கத்தினாள், கைகளால் சைகை செய்து காட்டியபடியே! வீர உணர்ச்சி கொப்பளிக்கும் கண்மணியின் கருத்தை உணர்ந்த ஊமைத்துரை கலங்கினான்; கண்ணீர் வடித்தான்.

"வேண்டாம் அம்மா" என்றான்.

"மாட்டேன்!" என்றாள்.

"சொல்வதைக் கேள்..."

"முடியாது!..."

"நீ சிறியவள். உன்னால் என்ன செய்ய முடியும்? வெள்ளைக்காரர்கள் விஷப்பூச்சிகள்! கருணையற்ற காட்டேரிகள்! இரக்கமற்ற அரக்கர்கள்!..."

"மாமா, நான் சிறியவள் தான். இருந்தால் என்ன? நாளை இரவு அந்தத் தருக்கர்களின் தலைகளை உங்கள் காலடியில் கொண்டு வந்து சமர்ப்பிக்கிறேன் பாருங்கள். வணக்கம். நான் போய் வருகிறேன்!..."

"கண்மணி!..."

"மாமா!... பாஞ்சாலங்குறிச்சி மண்ணில் பிறந்த பச்சைக் குழந்தைகூடப் புலியை எதிர்க்கும் வீரக்குணம் படைத்தது என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்களே!... நான் போய் வருகிறேன்!"

கண்மணி போய்விட்டாள்! ஊமைத்துரை, கண்மணியின் கடும்புலி வீரத்தைக் கண்டு உள்ளம் பூரித்துப் போனான்!

★

கண்மணி—யார் அவள்?

பாஞ்சாலங்குறிச்சிப் புரட்சிப் போரின் முதல் நாளில், கும்பினிப் படைத் தளபதி காலின்ஸ் என்பவனைத் தன் கூரிய ஈட்டியால் நெஞ்சைப் பிளந்த வீர சிங்கம் பாதர் வெள்ளையின் அருமை மனைவி வெள்ளையம்மாளின் அருமைத் தங்கைதான்—பாதர் மைத்துனிதான்—கண்மணி!

கண்மணி ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கி ஓடினாள். வீட்டிற்கு வந்தாள்; பார்த்தாள். அவளுடைய அருமை அம்மா கும்பினிப் பூதங்களின் குண்டுகளுக்குப் பலியாகிவிட்ட தனது மருமகன் பாதர் வெள்ளையையும், தன் கண்ணன மகள் வெள்ளையம்மாவையும் நினைத்து

ஒப்பாரி வைத்துக்கொண்டிருந்தாள். தன் பொன்னை அம்மா கண்ணீர் வடிப்பதைக் கண்ட கண்மணிக்கு மனதை என்னவோ பண்ணியது. வேதனையைத் தாளாமல் அவள் உள்ளம் விம்மியது. "அம்மா!..." என்று நெஞ்சு தழுதழுக்கக் கூப்பிட்டாள். அம்மா ஒப்பாரியை நிறுத்திக்கொண்டு திரும்பிக் கண்மணியைப் பார்த்தாள். பார்த்ததும் சரேலென்று எழுந்தாள். பாய்ந்தோடினாள்...

'டபக்!'-அம்மா கண்மணியை மார்போடு இறுக அணைத்துக் கொண்டாள். குழந்தையைப் போலத் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். அம்மாவின் அழுத் துயரத்தைக் கண்ட கண்மணிக்குக் கண்கள் கலங்கின.



எனினும், அவள் குமுறிக் கொந்தளித்துக்கொண்டுவந்த அழுகையை எப்படியோ சமாளித்துக் கொண்டாள்.

"அம்மா, அழாதேம்மா..." என்று ஆதரவாகச் சொன்னாள் கண்மணி. அம்மா, மேலும் வீறிட்டுக் கதறிக் கதறி அழ ஆரம்பித்தாள். ஒப்பாரிக் கடலில் விழுந்துவிட்ட அம்மாவைக் கரைசேர்ப்பதற்குள் கண்மணிக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது.

அப்புறம்—

நேரம் உருகி மறைந்து கொண்டே இருந்தது.

அன்று முன்னிரவு....

எங்கும் பயங்கர அமைதி. பாஞ்சாலங்குரிச்சிப் பிரதேசமெங்கும் ரத்தக்காற்று வீசியது. ஆந்தைகள் அலறின. கோட்டான்கள் கூவின. கழுகுகள் கிரீச்சிட்டன. நரிகள் ஊளையிட்டன. பெற்றோர்களை இழந்த பிள்ளைகளும், பிள்ளைகளை இழந்த பெற்றோர்களும் குடிசைக்குள் அமர்ந்து ஓலமிட்டுக்கொண்டிருந்தனர்!

அவள், தன் அம்மாவின் பக்கத்தில் சும்மாவாவது கண்களை மூடிக்கொண்டு தூங்குவதுபோல் பாவனை செய்துகொண்டிருந்தாள். வெகுநேரம் சென்றபின், கண்மணி மெல்லத் திரும்பினாள்; கண்களைக் கொஞ்சம் திறந்து அம்மாவைப் பார்த்தாள்.

அம்மா மெய்மறந்து தூங்கிக் கொண்டிருந்தாள். கண்மணி ஓசைப் படாமல் மெல்ல எழுந்தாள். கட்டிலைவிட்டுக் கீழே இறங்கினாள்; போனாள்; அங்கு மாடத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு சிறிய குத்துக்கத்தியை எடுத்துக்கொண்டாள். அந்தக் கத்தி அவளுடைய அருமை அத்தான் பாதர்வெள்ளையின் குத்துக்கத்தி! கண்மணி குத்துக் கத்தியை எடுத்துக்கொண்டு மெல்லத் திரும்பினாள். அந்தச் சமயத்தில் ஆழமான கிணற்றின் அடித்தளத்திலிருந்து கேட்பதுபோல் ஒரு மெல்லிய குரல், ரத்த வாடை கலந்த காற்றிலே மிதந்து வந்தது! அது என்ன குரல்?...

கண்மணி காதைத் தீட்டிக் கொண்டு உற்றுக் கேட்டாள்.

"கண்மணி!.......கண்மணி!...."

கண்மணி கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்து பார்த்தாள். வெளியே ஒரே இருள் மூட்டம், பனி மூட்டம். குளிர் மூட்டம். சற்று தூரத்தில் ஒரு பெரிய ஆலமரம். மரத்தின் அடியிலே ஓர் இருள் உருவம் இராகத்துடன் "கண்மணி! கண்மணி!..." என்று மிக மெல்லியதாகக் கூவிக் கொண்டிருந்தது!

கண்மணி, பார்வையைத் தேய்த்துக் கூராக்கிப் பார்த்தாள். ஒரு வினாடிக்குப் பின் அந்த ஆலமரத்தடி இருள் உருவம் யார் என்று தெரிந்துகொண்டாள் கண்மணி. அவள் மனம் குதூகலித்தது.

"ஓ......சிவஞானமா!......" என்று மனம் மகிழ்ந்து சொல்லிக்கொண்டே ஆலமரத்தடியை நோக்கி ஓடினாள் கண்மணி. ஒட்டப்பிடாரம் கிராமத்திலிருக்கும் சந்தனத்துரை என்னும் வீரனின் வீர மகன்தான் சிவஞானம். அவன் கண்மணியின் அருமைத் தோழன்.

"ஞானம்! ஏண்டா, இவ்வளவு நேரம்?"

"இதோ, இதற்குத்தான்!" என்று சொல்லிக்கொண்டே மரத்தடியில் வைத்திருந்த ஒரு சிறு மூட்டையைச் சுட்டிக் காட்டினான் சிவஞானம்.



புதுமைப்பித்தன் சிறுகதைப் பரிசு

பரிசு ரூ. 250

*

'பொன்னி' அறிவிக்கும்

முதல் சிறுகதைப்போட்டி

முதற் பரிசு	ரூ. 125
இரண்டாவது பரிசு	ரூ. 75
மூன்றாவது பரிசு	ரூ. 50

1. *1952* ஜூன் *30*-ம் தேதிக்குள் வரும் சிறுகதைகளே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். போட்டிக்கு ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட கதைகள் அனுப்பலாம். ஆனால் யாரும் ஒரு பரிசுக்கு மேல் பெற முடியாது.
2. சிறுகதைகள் இதுவரை வெளிவராததாகவும், மொழிபெயர்ப்பாகவோ, தழுவலாகவோ இல்லாமல் சொந்தமாய் எழுதியதாகவும் இருக்கவேண்டும்.
3. பரிசு பெறும் சிறுகதைகளைப் 'பொன்னி'யில் வெளியிடும் உரிமை அலுவலகத்திற்கு உண்டு. வெளியிடத்தக்கதெனத் தேர்ந்தெடுக்கப்படும் மற்ற சிறுகதைகளுக்கு ஆசிரியர் கருத்துப்படி அன்பளிப்பு வழங்கப்படும்.

*

[முழு விவரங்களை 10-5-52 'பொன்னி'யில் காணலாம்]

கண்மணி "என்ன மூட்டை?.." என்று புரியாமல் கேட்டுக்கொண்டே, குனிந்து மூட்டையை அவிழ்த்தாள்; பார்த்தாள்; மூட்டைக்குள்ளே பத்துப் பதினைந்து வெடி குண்டுகள் இருந்தன. வெடிகுண்டுகளைக் கண்ட கண்மணியின் உள்ளம் மகிழ்வால் துள்ளிக் குதித்தது. அவள் ஒரு வெடி குண்டைக் கையில் எடுத்துக்கொண்டே சிவஞானத்தைப் பார்த்து "எது இது?" என்று ஆவலுடன் கேட்டாள்.

"வரும்போது கும்பினியான் கூடாரத்திலேயிருந்து தூக்கிக்கொண்டு வந்துவிட்டேன்" என்றான் சிவஞானம், மிகப் பெருமையுடன்! கண்மணி புன்னகை செய்தாள். சிவஞானமும் புன்னகை புரிந்தான்.

"ஞானம், கிளம்பலாமா?"

"உம், கிளம்பு, அந்தக் கும்பினிக் குரங்குகள் குடிவெறியில் மூலைக்கு மூலை விழுந்து கிடக்குதுகள். இதுதான் சரியான சமயம்!"

"உம், சரி கிளம்பு!" என்று சொல்லிக்கொண்டே வெடி குண்டு மூட்டையைத் தூக்கிக்கொண்டு முன்னே நடந்தாள் கண்மணி. சிவஞானம் அவள் பின்னே நடந்தான். இருவரும் ஒட்டப்பிடாரத்தில் கூடாரம் போட்டுக்கொண்டிருக்கும் கும்பினிப் படைகளை நோக்கி வேகமாக நடந்தார்கள்!

(அடுத்த இதழில் முடியும்)

பாசம்

கலைச்செல்வ

“திருமணமாகி
ஆண்டுகள் ஐந்
தாகியும் இன்
னும் ஒரு குழந்
தைக் குக்கூடத்
தாயாகாத துர்ப்
பாக்கியசாலி
இவள். இவளோடு கலியாண
மான வசந்தாவோ இரண்டு
குழந்தைகளைப் பெற்றுவிட்
டாள். இவளோ மலடியாக
இருக்கிறாள்” என்று சொந்தக்
காரர்கள் தூற்றிக்கொண்டிரு
தனர். மல்லிகாவின் இதயமே
அனலில் விழுந்த புழுப்போல
துடித்துக்கொண்டிருந்தது.

தாலிகட்டிய கணவன்—ஆ
நாயகன் பிள்ளைப்பேறு அ
யாததைப் பற்றி அவளி
வெறுப்புக்கொள்ளவில்லை
யும் கிண்டல் மொழியும்
வில்லை. மாறாக, அதிக
தான் காட்டிவந்தான்
சுற்றுப்புறத்தாரின்
பேச்சு அவள் உள்ள
பெருமூச்சு விடுமா

மல்லிகா இ
செல்வங்களில்
பெற்றிருந்தாள்.
வன் போலீஸ்
தந்தையோ பெரு
இருந்தபோதிலு
வீணையில் இன்ப
வில்லை. ஆம்; அ
குழந்தையில்லாத
குறையாகத்தான்

கிள்ளைமொழி பே
களைக் குதூகலக்
கோலாகலத்துடன்

ந்துகொண்டார்.
ம் அவர் இதயத்
துன்பமெனும் கறை
யச் செய்தது. அவர்
ருந்த அழைப்பிதழ்
யும் அறியாமல் கீழே
தது. ஜன்னலின் வழி
வீசிய காற்றில் அகப்பட்டு
கும் இங்குமாக அசைந்தது
ந்த அழைப்பிதழ். அந்தக்
ட்சி அவரது கண்களுக்கு
அழகுக் குழந்தை ஒன்று



...க் குழந்தை
புதுமைப் சிரிப்பு அவ
...் புதைந்து
சிறுகதைப் ...் தட்டி
பிறகு
பரிசு ரூ. 250 ...றாயி
...ங்கி
...ய
.

*

'பொன்னி' அறிவிக்கும்

முதல் சிறுகதைப்போட்டி

முதற் பரிசு	ரூ. 125
இரண்டாவது பரிசு	ரூ. 75
மூன்ருவது பரிசு	ரூ. 50

1. *1952* ஜுன் *30*-ம் தேதிக்குள் வரும் சிறுகதைகளே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். போட்டிக்கு ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட கதைகள் அனுப்பலாம். ஆனால் யாரும் ஒரு பரிசுக்கு மேல் பெற முடியாது.
2. சிறுகதைகள் இதுவரை வெளிவராததாகவும், மொழிபெயர்ப்பாகவோ, தழுவலாகவோ இல்லாமல் சொந்தமாய் எழுதியதாகவும் இருக்கவேண்டும்.
3. பரிசு பெறும் சிறுகதைகளைப் 'பொன்னி'யில் வெளியிடும் உரிமை அலுவலகத்திற்கு உண்டு. வெளியிடத்தக்கதெனத் தேர்ந்தெடுக்கப்படும் மற்ற சிறுகதைகளுக்கு ஆசிரியர் கருத்துப்படி அன்பளிப்பு வழங்கப்படும்.

*

[முழு விவரங்களை 10-5-52 'பொன்னி'யில் காணலாம்]

தங்கள் சுற்றம் சூழ வந்திருந்து சிறப்பிக்குமாறு விழைகின்றோம்.

இங்ஙனம்,
சரோஜா சம்பந்தம்"

அவர் படித்தார். மீண்டும் ஒருமுறை படித்தார். அந்தச் சொற்கள் மல்லிகாவின் உள்ளத்தை மகிழ்வித்தபோதிலும் அடுத்த வினாடி அவள் முகத்தில் கவலையின் ரேகை படர ஆரம்பித்தது. அவள் தன் முகமாற்றத்தை மறைக்க முயன்றாள். ஆனால் அவளையும் ...றிக் கண்களிலிருந்து நீர் ...ன்னத்தின் வழியாக வழிய ...ரும்பித்தது.

...வளுடைய முகமாற்றத் ...னைக் காரணம் புரியாது ...புன்ஸ்பெக்டர் இருளப்பன் ...தார்.

"ஞ...கா ஏன் அழுகிறாய்?"

"உம், ...டன் கேட்டார்.

...பினிக் கு... தில்ஒன்றும் சொல்ல ...மூலைக்கு ...டமடவென்று கண் ...குதுகள். ...ரை உதிர்த்தன. சமயம்!" ...ப்பத்திலே வேலைக்

"உம், சரின் குழந்தையுடன் சொல்லிக்கொண்ற குரலோடு ...குண்டு மூட்டிந்தாள்.

...கொண்டு ...முல் அவள் இத கண்மணி. ...சி செய்தது என் ...பின்னே நடந்கம் மிகவும் நன் ...ஓட்டப்பிடாரகாட்டியது.

...போட்டுக்கொநாட்டி நொட்டி" ...பினிப் படைச் சொற்களுடன் ...மாக நடந்தா... கைகளால் அவள் ...த்துக்கொண்டிருந் ...(அடுத் ...குழந்தை. கண்

ணீரைத் துடைத்துக்கொண்டு அந்தக் குழந்தையை வாங்கி அன்புடன் முத்தங்கள் கொடுத்துக் கொஞ்சினாள். பசித்தவன் ருசி பார்ப்பதில்லை; அவளும் வேலைக்காரிபிள்ளை என்று வேறுபாடு காட்டவில்லை.

மல்லிகாவின் முகத்தில் ஆரம்பத்தில் உண்டாகிய மகிழ்ச்சிக்கும், பிறகு அவள் உதிர்த்த கண்ணீருக்கும் பொருள் விளங்காது தவித்த இருளப்பன் இப்பொழுது புரிந்துகொண்டார். அந்த விளக்கம் அவர் இதயத் திரையில் துன்பமெனும் கறையைப் படியச் செய்தது. அவர் கையிலிருந்த அழைப்பிதழ் அவரையும் அறியாமல் கீழே விழுந்தது. ஜன்னலின் வழியாக வீசிய காற்றில் அகப்பட்டு அங்கும் இங்குமாக அசைந்தது அந்த அழைப்பிதழ். அந்தக் காட்சி அவரது கண்களுக்கு அழகுக் குழந்தை ஒன்று



தவழ்ந்து விளையாடுவதுபோல் இருந்தது.

சுவரில் மாட்டியிருந்த கடிகாரம் மணி பத்து என்பதைத் தெரிவித்தது. அவர் ஆபீசை நோக்கி விரைந்தார்.

மாதமெனும் மலர் நாட்கள் என்னும் இதழ்களை விரித்துக் கொண்டிருந்தது.

மல்லிகாவின் உள்ளத்தில் உண்டாகும் கவலையெல்லாம் அந்தக் குழந்தையால் கரைந்து கொண்டிருந்தன. விமலாவின் ஒட்டிய கன்னங்கள் இன்று கதுப்புக் கன்னங்களாக மாறின. அவளுடைய மங்கிய கண்கள் மீண்டும் புத்தொளி பெற்றன. தேய்ந்து மறைந்திருந்த அழகு புத்துயிர்பெற்றுப் பிரகாசித்தது. அவள் உடல் வளர்ந்தது. உள்ளம் மட்டும் பின்னேக்கிச் செல்ல ஆரம்பித்தது.

வறுமையில் வாடும்பொழுது நீதி, நேர்மை, உண்மை பேசும் பலர் இன்பமாக வாழும் காலத்தில் அவைகளைப்பற்றி நினைப்பதே இல்லை. அந்தப் பட்டியலிலேதான் விமலாவும் சேர ஆரம்பித்தாள். வேலைக்காரியாக இருக்க அவளுக்குப் பிடிக்கவில்லை. சுதந்தர வானம்பாடியாகத் திரிய எண்ணம் கொண்டிருந்தாள்.

மல்லிகா அவளை வேலைக்காரி என்று எண்ணி அலட்சியம் செய்யவில்லை. அவளை அன்புடன்தான் நேசித்து வந்தாள். அன்றொரு நாள், மல்லிகா, கிளிமொழி பேசும் அந்தக் குழந்தையை எடுத்து ஆரத் தழுவி விளையாடிக் கொண்டிருந்தாள். அந்தப் பொல்லாத குழந்தை அவள் அணிந்திருந்த சங்கிலியைப் பிடித்து இழுத்தது.

"சங்கிலி வேணுமோடா? இந்தா போட்டுக்கோ"—அவள் தங்கச் சங்கிலியைக் கழற்றி அக்குழந்தையின் கழுத்தில் போட்டாள்.

அந்தக் குழந்தை சிரித்தது; அவளும் சிரித்தாள்.

படுக்கையில் படுத்துக் கொண்டே விளையாடிக்கொண்டிருந்த மல்லிகா அசதியால் தூங்கிவிட்டாள்.

அந்தக் குழந்தை அருகிலிருந்த புத்தகம் ஒன்றை எடுத்துப் பிய்த்துக்கொண்டிருந்தது.

குடத்தில் தண்ணீர் பிடித்துக் கொண்டு குழாயடியிலிருந்து வந்தாள் விமலா. "அம்மா அம்மா" என்று அழைத்தது அவள் குழந்தை. அவள் திரும்பினாள். தங்கச் சங்கிலி பளிச்சென்று 'டால்' வீசியது.

அதைப் பார்த்தவுடன் அவள் இதயக் கடலில் எண்ண அலைகள் வேகமாக அடித்தன. சில நாட்களாக அவள் உள்ளத்தில் ஊறிக் கிடந்த திட்டங்கள் இன்று ஈடேற வாய்ப்புக் கிடைத்தது.

குடத்தை இறக்கிவிட்டுக் குழந்தையின் அருகில் சென்றாள். அவள் இதயம் 'டக் டக்' கென்று வேகமாக அடித்துக் கொண்டது.

அன்னமிட்ட வீட்டில் கன்னமிட நினைத்தாள்! ஆம், அவள் செய்தேவிட்டாள்! குழந்தையைச் சங்கிலியுடன் தூக்கிக் கொண்டு கம்பி நீட்டிவிட்டாள்!

நன்றி கெட்ட உலகம் இது! நன்மை செய்தவர்களுக்குத் தீமை செய்வது பெரும்பாலோரின் இயல்பாகிவிட்டது.

விமலா நடந்தாள். மிகவும் வேகமாகநடந்தாள், புகை வண்டி நிலயம் நோக்கி.

'கார்டு' பச்சைக் கொடியைக் காட்டினார். 'உஸ்' என்ற சத்தத்துடன் வண்டி புறப்பட்டது. அவள் ஓடிப்போய் மூன்றாவது வகுப்புப் பெட்டியில் ஏறி உட்கார்ந்தாள். புகை வண்டி காற்றின் வேகத்தில் ஓட ஆரம்பித்தது.

"என்ன முருகேசா?" அவள் குரலில் ஆவல் நிரம்பியிருந்தது.

"பஸ் ஸ்டாண்டிலிருந்து ஸ்டேஷன் வரை தேடிட்டேனுங்கோ, அவளைக்காணேமுங்க"

பியூன் முருகேசன் அலைந்த களைப்பினால் சோர்வுடன் பதில் சொல்லிவிட்டு நின்றான்.

மல்லிகா தேம்பித் தேம்பி அழுதாள். அந்தக் குழந்தையின் பிரிவு அவள் இதயத்தை எரித்துக்கொண்டிருந்தது.

"எங்கிருந்தாலும் கண்டு பிடித்துவிடுகிறேன், அழாதே மல்லிகா" என்று அருகிலிருந்த இன்ஸ்பெக்டர் இருளப்பன் தேற்றிக்கொண்டிருந்தார்.

"கேஸ் பதிவு பண்ணிடுங்களேன்"—முருகேசன் தன் சிந்தனையில் உதித்ததை வெளியிட்டான்.

"பேசாம வேலையைக் கவனிடா அதிகப் பிரசங்கி"—இன்ஸ்பெக்டர் இருளப்பன் முருகேசன்மீது சீறி விழுந்தார். 'கேவலம் நான்குபவுன் சங்கிலிக்காகவா கேஸ் பதிவு செய்வது? அவள் கைதானால் அந்தக் குழந்தை...! சே சே! கூடாது.' என்று இருளப்பனின் இதயம், ஒரு முடிவிற்கு வந்தது.

அந்த இளந் தம்பதிகள் நகைக்காக வருந்தவில்லை. குழந்தையின் பிரிவிற்காக – விமலாவினுடைய நெஞ்சத்தின் மாற்றத்திற்காக வருந்தினார்கள்.

அன்று திங்கட்கிழமை. அந்த ஊரில் அன்று எட்டாம் திருவிழா!



ஆபீஸ் பையன்: கிடைச்சிடுமுங்க. இன்னிக்குத்தானே எங்க ஆபீஸ் ஆட்கள் அத்தனைபேரும் காணுமல் போன உங்க நாயைத் தேடப் போயிருக்கரங்க........

வேலைக்காரி விமலா வேலைக்காரியாகத்தான் இருந்தாள். திருவிழாப் பார்க்கவேண்டுமென்ற எப்பாசை அவள் உள்ளத்தில் ஊறியது.

ஹோட்டல் வேலைகளைச் சிக்கிரமாகச் செய்துவிட்டுத் திருவிழாப் பார்க்கத் தயாராஞள். ஏதோ அலங்கரித்துக்கொண்டாள். அருமைக் குழந்தைக்கு 'அந்த'ச் சங்கிலியை அணிவித்து அழைத்துச் சென்றுள்.

அம்மா 'பலூன்—பலூன்' என்று பலூன் கடையை நோக்கி அழுதது அவள் குழந்தை.

"பலூனு வேணும் கண்ணு" என்று கேட்டுக்கொண்டே குழந்தையைக் கீழே இறக்கினள். பலூன்களைப் பூட்டிக்கொண்டு விலை பேசிக்கொண்டிருந்தாள் விமலா.

அருகிலிருந்த அந்தப் பொல்லாத குழந்தை சிரித்துக்கொண்டே கூட்டத்தினுள் புகுந்தது. பிறகு தாயைக் காணுது "அம்மா அம்மா" வென்று அழுதுகொண்டே மனம் சென்ற வழி சென்றுகொண்டிருந்தது.

விமலா பலூனை வாங்கிக்கொண்டு குழந்தையைப் பார்த்தாள். குழந்தையைக் காணவில்லை. தேடினுள். அவள் பதறினுள். "குழந்தையைப் பார்த்தீர்களா—குழந்தையைப் பார்த்தீர்களா?" என்று அழுதவாறு கேட்டுக்கொண்டு சென்றுள்.

"சிவப்பு நிறமும், கழுத்தில் தங்கச்சங்கிலியும் அணிந்திருந்த சுமார் மூன்று வயதுக் குழந்தை ஒன்றைத் திருடன் ஒருவன் கொல்ல எத்தனிக்கும்போது நாங்கள் அவனைப் பிடித்துக் குழந்தையைக் காப்பாற்றி இருக்கிறோம். தகுந்த காரணமும், அடையாளமும் கூறிப் பெற்றோர்கள் இருந்தால் வந்து அழைத்துச் செல்லவும்"—இப்படியாகக் கான்ஸ்டபிள் ஒருவன் 'மெக்கபோனில்' ஐந்து நிமிஷத்திற்கொருதரம் சொல்லிக்கொண்டிருந்தான்.

வாய்விட்டு அழுதுகொண்டு சென்ற விமலாவின் செவியில் காற்றிலே கலந்துவந்த அந்தக் குரல் கேட்டது.

இடிந்துவிழப்போகும் அவள் இதயச் சுவருக்கு அந்தக் குரல் முட்டுக்கட்டையாக நின்றது.

அவள் ஒலி வரும் திக்கை நோக்கி ஓடினாள். வேகமாக ஓடி நின்றாள்.

"சாமி, என் குழந்தை" என்று கூறிக்கொண்டே மேசையின் பக்கம் திரும்பினாள்.

அங்கு இன்ஸ்பெக்டர் இருளப்பன் தன்னுடைய எதிர்பாராத வெற்றியை நினைத்துப் புன்னகை பூத்த முகத்துடன் அமர்ந்திருந்தார்.

"சா...மி!"—விமலா தடுமாறினாள்.

"ஏய், யார் நீ?" — கான்ஸ்டபிள் கண்ணுசாமி விழிகளை உருட்டிக்கொண்டு கர்ஜித்தான்.

"122, நீ பேசாம இரு" என்று குரல் கொடுத்துவிட்டு இருளப்பன் விமலாவை நோக்கினார். பொங்கிவரும் சிரிப்பை அடக்கிக்கொண்டு 'இன்ஸ்பெக்டர்' உருவத்தை எடுத்தார்.

"ஏய், என்னவேண்டும்?"—

"கு...கு...குழந்தை!"—அவள் குழப்பினாள் வார்த்தைகளை.

"பெயர் என்ன?"

"விமலா"—குரல் நடுங்கியது.

"ஊம்...குழந்தையின் பெயரைக் கேட்டேன்?"

"சே...கர்"—அவள் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்து கொண்டிருந்தது.

"யார் வைத்த பெயர்?"—அவர் சிரிப்பை அடக்கிக்கொண்டார். இதயத்திரையில் அவர்

மினி மல்லிகாவின் உருவம் தோன்றிக் கொண்டிருந்தது.

"வந்து... எசமானியம்மா?" அவள் உண்மையைக் கூறிவிட்டாள்.

"என்ன தொழில்?"

"வேலைக்காரி"

"எங்கே வேலை?"

"ஹோட்டலில்"

"எந்த ஹோட்டல்?"

"இராவண விலாஸ்"

"சங்கிலி ஏது உனக்கு?"

"..............."

"சீக்கிரம் பதில்?" அருகிலிருந்த பிரம்பைக் கையிலெடுத்தார் அவர்.

"ஒரு அம்மா...!"

அதற்குமேல் அவர் ஒன்றும் கேட்கவில்லை. "குழந்தையைப் பத்திரமாக அழைத்துச் செல்" என்று கூறிவிட்டு 'சேகை' ஒன்று வாங்கிக்கொண்டு உத்தரவு கொடுத்தார்.

அவள் நடுங்கும் கரங்களைக் கூப்பி வணங்கிவிட்டு, குழந்தையை எடுத்துக்கொண்டு சென்றாள். தூரத்தில் நின்றுகொண்டிருந்த போலீஸ் ஒருவனிடம் ஏதோ கேட்டுவிட்டு வேகமாக நடந்துகொண்டிருந்தாள். அவள் உள்ளம் எதையோ ஒன்றை வலியுறுத்திக் கொண்டிருந்தது.

"மல்லிகா, கேட்டாயா சங்கதியை?" என்று கேட்டுக் கொண்டேசட்டையைக்கழற்றிக் கொண்டிருந்தார் இருளப்பன்.

"என்ன!" என்று ஆவலுடன் கேட்டாள் மல்லிகா.

"விமலாவைப் பார்த்தேன்"

"என்ன! என்ன! விமலாவா! குழந்தை சேகர்...!" ஆச்சரியத்தால் அவள் ஏதேதோ அடுக்கிக் கொண்டு போனாள்.

"நம்மை இந்த ஊருக்கு மாற்றியிராவிட்டால் நாம் எங்கே அவளைப் பார்க்க முடியும்? எல்லாம் சொல்லுகிறேன் வா!" என்று அவள் மலர்க்கைகளைப் பற்றிக்கொண்டு நாற்காலியின் அருகே சென்றார்.

"அம்மா" என்று அழைக்கும் ஈனக்குரல் ஒன்று அவர்கள் செவியில் மோதிற்று.

"யார் அங்கே?" என்று இருவரும் சேர்ந்தாற்போல் கேள்வியை விடுத்துக்கொண்டே வாசல் பக்கம் சென்றார்கள்.

விமலா கலங்கிய கண்களுடன் "அம்மா என்னை மன்னிச்சிடுங்க" என்று சொல்லி அந்தச் சங்கிலியை மல்லிகாவின் காலடியில் போட்டுவிட்டு அவள் காலைப் பிடித்துக்கொண்டு அழுதாள்.

"மன்னிப்பா? எதற்கு?" என்று மல்லிகா அவளைத் தூக்கிவிட்டு, குழந்தைக்கு ஆவலுடன் ஆசைதீர முத்தம் கொடுத்தாள். அந்தக் குழந்தையும் அவளையே உற்றுப்பார்த்துச் சிரித்தது. "மல்லிகா, குழந்தையின் கன்னம்...!" என்ற கேலியுடன் கூறிக்கொண்டே சிரித்தார் இன்ஸ்பெக்டர் இருளப்பன்.

Edited, Printed and Published by Murugu Subramanian for Ponni Ltd., at Ponni Achakam, 16, Seni Amman Koil Street, Tondiarpet. Madras-21.



பூவின் சிரிப்புடன் போட்டியிடும்
பூவையின் புன்சிரிப்பு!

ராணியில் பானுமதி



அழகிக்குக் காவலா, அல்லது அழகுக்கு
ஆபத்தா?

காடு படத்தில் மேரிவிண்ட்ஸர்